விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 01 செவ்வாய்க்கிழமை (16.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362







# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

## அரசாங்கம் ஆலோசிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் சட்ட விதிகளுக்கு முரணாகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மருத்துவமனை மீது எறிகணைத் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் முல்லைத்தீவு அரசாங்க மருத்துவமனையும் பாதிக்கப்பட்டதாக அங்கிருந்து வருகின்ற செய்திகள் கூறுகின்றன.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அங்கு தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் முல்லைத்தீவு மாஞ்சோலை, முள்ளியவளை பகுதிகளில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகலில் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்த எறிகணைத் தாக்குதல்களின்போது பொது வைத்தியசாலை பாதிக்கப்பட்டதையடுத்து அது செயலிழந்துள்ளதாக அந்த வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி டாக்டர் டி.சண்முகராஜா தெரிவிக்கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பால்மாக்களின் விலை நேற்று முதல் குறைப்பு

(கொழும்பு)

பால்மாவின் விலைகள் நேற்றுமுதல் அமுலுக்கு வரும் வகையில் குறைவடைவதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய விலைமாற்றத்திற்கு ஏற்ப 400 கிராம் எடை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தந்திரங்களைக் கண்டு படையினர் பின்வாங்க மாட்டார்கள்

### ஜனாதிபதி உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் எந்த விதமான போர்த் தந்திரங்களைக் கடைப்பிடித்தாலும் எந்த வகையான தாக்குதல் முறைகளைக் கையாண்டாலும் எமது படையினர் போர்க்களத்தில் ஒரு போதும் பின்வாங்க மாட்டார்கள். முன்னேறிக் கொண்டே செல்வார்கள் இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

அம்பேபுசவில் சிங்க ரெஜிமென்ட் படைத் தளத்தில் இடம்பெற்ற நிகழ்வில கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் மீதான விலையை நிர்ணயிக்க உயர் நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைந்த போதும் இலங்கையில் குறைக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி மக்களுக்கு சலுகை வழங்கப்பட வேண்டு மெனக்கோரி உயர்நீதிமன்றத்தில் பாலித தேரர், ரவி கருணாநாயக்க எம்.பி. ஆகியோர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி மனு மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நால்வர் கடத்தப்பட்டதாக மனித உரிமைக் குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு, மீசாலை மேற்கு மற்றும் கரவெட்டி ஆகிய இடங்களில் வைத்து நால்வர் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

வரணி வடக்கைச் சேர்ந்த இரத்தினம் ரஞ்சித்குமார் (வயது 19), இராமநாதன் சத்தியநாதன் (வயது 25) ஆகியோர் கடந்த 12 ஆம் திகதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவைப் பகைக்காது உதவிகளைப் பெற வேண்டும்

### ஜனாதிபதிக்கு ரணில் ஆலோசனை

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் இந்தியாவை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் உதவிகளைப் பெற்று பிரச்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பகாமம் மீட்பு படையினர் அறிவிப்பு

(கொழும்பு)

மாங்குளம் பிரதேசத்திலுள்ள அம்பகாமம் கிராமத்தை படையினர் வசப்படுத்தி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மாங்குளத்திற்கு கிழக்கே சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இந்த பகுதி 2 நாட்களாக நடந்த கடும் மோதல்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)


## பாதுகாப்பான மனிதக் கழிவகற்றல்

வெளியிடங்களில் மலங்கழிப்பதால் பின்வரும் தொற்று நோய்கள் பரவலாம்.

✦ வயிற்றோட்டம் ✦ வயிற்றுளைவு ✦ நெருப்புக் காய்ச்சல்
✦ செங்கமாரி ✦ வாந்திபேதி (கொலரா) ✦ புழுவியாதிகள்

- வெளியிடங்களில் கழிக்கப்படும் மலக்கழிவுகள் நீருடன் கரைந்து உங்களது கிணறுகள் மற்றும் நீர்நிலைகளை மாசுபடுத்தும்.
- அத்துடன் துர்நாற்றம் மற்றும் இலையான்களின் பெருக்கத்துக்கும் வழிவகுக்கும்.

தொற்று நோய்கள் ஏற்படாது உங்களைப் பாதுகாக்க,

✦ பாதுகாப்பான மலகூடங்களையே எப்போதும் மலங்கழிக்கப் பாவியுங்கள்.
✦ பிள்ளைகளின் மலக் கழிவுகளையும் மலகூடத்தினுள் இட்டு பாதுகாப்பாக அகற்றுங்கள்.
✦ மலகூடத்தைப் பாவித்தபின் போதுமான நீரூற்றிக் கழுவுவதுடன் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை care CARE International

(C-1814)

# புறக்கோட்டை குண்டுத் தாக்குதல் பிச்சைக்காரர்கள் இருவர் கைது

(கொழும்பு)

புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தாரிக்கு உதவியதாகக் கூறி இரண்டு பிச்சைக் காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கடந்த வாரம் விசேட பொலிஸ் குழுவால் கைதுசெய்யப்பட்டதாகவும், இவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி புறக்கோட்டை புகையிரதநிலையத்தில் நடந்த தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவத்திற்கு உதவியதா கவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா லிந்துல பகுதியை சேர்ந்த ஆண் ஒருவரும் வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர். 1980 ஆம் ஆண்டு முதல் புகை யிரத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் பணி யாற்றிய அந்த ஆண் 2000 ஆம் ஆண்டு புகையிரதத்தில் இருந்து வீழ்ந்து கால்களை இழந்ததாக தெரிய வருகிறது.

அதனைத் தொடர்ந்து அவர் 2001 ஆம் ஆண்டு முதல் பிச்சை எடுத்து வருவதாகவும் புகையிரதங்களிலேயே அவர் பெரும்பாலும் பிச்சைஎடுப்பதாகவும் ஆரம்பகட்ட விசாரணை களிலிருந்து தெரிய வருவதாக பொலிஸ் வட் டாரங்கள் கூறுகின்றன.கூடுதலாக கொழும்பு-வவுனியா புகையிரதங்களில் பிச்சை எடுத்த அவர், அந்தப் பிச்சைக்கார பெண்ணை புகை யிரதத்தில் சந்தித்ததுடன் புகையிரதநிலையத் துக்கு வெளியே தமது தங்குமிடத்தை அமைத் துக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. இவர் கள் பற்றி அறிந்து கொண்ட புகையிரதநிலைய அதிகாரிகள் அவர்களை புகையிரதங்களுக் குள் பிச்சை எடுக்க அனுமதித்து இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர்களுக்கு பணம் கொடுத்த விடுதலைப் புலிகள் புகை யிரத நிலையத்துக்குச் செல்வதற் கான வழிகள் மற்றும் நிலைமைகள் பற்றி அறிந்து கொண் டதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள் ளது.

இவர்கள் புகையிரதநிலையத்திற்கு வெளியே உள்ள நபர் ஒருவரிடம் இருந்து தற் கொலை அங்கியைப் பெற்று வந்து புகையிர தத்திலுள்ள பெண் ஒருவரிடம் வழங்கியதாக வும் இதற்காக அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண் தற்கொலைதாரி தற்கொலை அங் கியை அணிந்து கொள்வதற்கு தாம் உதவிய தாக கைதுசெய்யப்பட்ட பிச்சைக்காரர்கள் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித் துள்ளனர். எனினும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் குண்டு வெடித்து விட்டதாகவும் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் தாம் தூரத்தில் நின்றுபார்த்துக் கொண்டிருந்ததா கவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# ஐ.தே.க-முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள வட மேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல் களில் போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐக்கிய தேசியக் கட் சிக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை யொன்று நடைபெறவுள்ளது.

தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து கட்சியின் மத்திய செயற்குழு பேச்சுவார்த்தைகளின் பின்னர் தீர்மானிக்க உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது குருநாகலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட் டியிட்டு இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதாகவும், கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிட்டு தலா இரண்டு ஆசனங் களைப் பெற்றுக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மாகாண சபைகளிலும் ஆசனங் களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மிகவும் உசிதமான முறையொன்றை தெரிந்து அதன் மூலம் தேர்தலில் போட்டியிட தீர்மானித் துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# இலுப்பைக்கடவையில் புதிய பொலிஸ் நிலையம்

(கொழும்பு)

மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் புதிய பொலிஸ் நிலையமொன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு தியிலிருந்து அரசாங்கப் படைகளால் மீட்கப் பட்ட இலுப்பைக்கடவைப் பகுதியில் இந்தப் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் அரசாங்கப் படை களால் மீட்கப்பட்ட பின்னர் சிலாவத்துறை, மடு, விடத் தல்தீவு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே பொலிஸ் நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன. நான் காவது பொலிஸ் நிலையமாக இலுப்பைக் கடவை பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளின் உட்கட்டு மானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அங் குள்ள மக்கள் சமாதானமாகவும், சுதந்திரமா கவும் வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப் படும் எனவும் அரசாங்கம் தொடர்ந்து கூறி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வடக்கு மாகாண ஆளுநர் வவுனியாவுக்கு திடீர் விஜயம்

(வவுனியா)

வடமாகாண ஆளுநர் டிக்ஸன் டெலபண் டார வவுனியாவுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

நேற்று வவுனியாவுக்குச் சென்ற வடமா காண ஆளுநர் வவுனியா மாவட்ட அரசாங்க செயலகத்தில் விஷேட சந்திப்புக்களை நடத்திய துடன் வவுனியா மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அரசாங்க கட்டுப்பாட்டுப் பகு திக்கு வந்திருக்கும் மக்கள் தொடர்பாகவும் விரி வாகக் கலந்துரையாடியுள்ளார்.


இந்த சந்திப்பில் மிக முக்கியமாக நான்கு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்ட தாக வவுனியா மாவட்ட அரசாங்க செயலக வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த வருடத்தில் வவுனியா மாவட்டத் தில் வடமாகாண ஆளுநருக்குரிய காரியால யம் அமைப்பது தொடர்பாகவும் விவசாயி களுக்கு 350 ரூபாயுக்கு மானிய முறையில் உரம் வழங்குவது, மதவாச்சி-வவுனியா வீதி யினை புனரமைப்பது மற்றும் மன்னார், வவு னியா மாவட்டங்களில் இருக்கும் ஆசிரியர்பற் றாக்குறையினை நிவர்த்தி செய்வது ஆகிய முக்கிய நான்கு விடயங்கள் கலந்துரையாடப் பட் டுள்ளன.

வடமாகாண ஆளுநர் நேற்று வவுனியா வுக்கு திடீர் விஜயம் செய்தமையால் வவுனியா நகர் மற்றும் நகரை அண்டிய பிரதேசங்கள் மிகவும் இறுக்கமான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்காக அதிகளவில் இராணுவத்தின ரும் பொலிஸாரும் விஷேட அதிரடி படையின ரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பாதுகாப்புத் தரப்பினர் விசேட ரோந்து நடவ டிக்கைகளையும் முன்னெடுத்திருந்தனர். (ச-5)


## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



J/81, முத்தமிழ் மாதர் சங்கத்தினருக்கு அண்மையில் பயிற்சி பெறுவதற்கு தையல் இயந்திரம் மற்றும் தளபாடங்கள் வழங்கியமைக்காகவும் மற்றும் எமது பகுதி மக்களுக்கு 25,000 ரூபா நிதி கொடுத்து உதவியமைக்காகவும் அத்துடன் அண்மையில் ஏற்பட்ட நிஷா அனர்த்தத்தின் போது உணவுப் பொருட்கள் கொடுத்தமைக்காகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர்

### உயர்திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். மற்றும் எமது பகுதி பொறுப்பாளர் தோழர் றீகன் அவர்களுக்கும் உதயன் அவர்களுக்கும் இதற்கு உதவியாக இருந்த எமது பகுதி கிராம சேவையாளர் திரு.மகாலிங்கம் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

முத்தமிழ் மாதர் அபிவிருத்தி சங்கம்
முத்தமிழ் வாழ் மக்கள்

(2006)


# திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி கோவில் வருடாந்த திருவாசக விழா இன்று காலை 7 மணி முதல் இடம்பெறவுள்ளதாக ஆலய பிரதமகுரு நீர்வைமணி கு.தியாக ராஜக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-3)

# நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால், மக்களை நோக்கி சேவைகள் நடைபெற விருப்பதால் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை நல் லூர் வடக்கு, சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் சனசமூக நிலைய முன்றலில் இலவச ஆயுள் வேத வைத்திய சேவை மற்றும் அலுவலக சம் பந்தமான பிரச்சினைகள், அபிவிருத்தி சம் பந்தமான ஆலோசனைகள் ஆதனவரி, கட் டிட விண்ணப்பம் தொடர்பான சேவைகளும் நடை பெறவிருப்பதாக சபையின் செயலாளர் மேரி யோசேப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி ம.மகளிர் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் க.பொ.த உயர் தர வகுப்புக்களில் விஞ்ஞான கணிதப் பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு வடமா காண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2009ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை வகை 1 எபி ஆகவும் தரமுயர்த்தப் பட்டுள்ளது. இப்பாடசாலை கரவெட்டிப் பிரதே சத்தின் ஒரேயொரு பெண்கள் பாடசாலை என் பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஒளிவிழாவும் அறக்கொடை அன்பளிப்பும்

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்படும் ஒளிவிழாவும், அறக்கொடையும் நிதிய அன் பளிப்பும் நாளை 17 ஆம் திகதி புதன்கிழமை சபையின் கலாசார மண்டபத்தில் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் எஸ்.சந்திரமவுலி தலைமையில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம் பமாகும்.

அந்நிகழ்வில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட தரம் நான்கில் கல்வி கற்கும் பாடசாலை மாண வர்கள் 35 பேருக்கு ஒரு கல்வியாண்டிற்குத் தேவையான எழுதுபொருட்கள் புத்தகப்பை யுடன் ஊழியர் அறக்கொடை நிதியத்தில் இருந்து வழங்கப்படும். தொடர்ந்து வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அவர்களின் ஒளி யேற்றலுடனும் மதப் பெரியார்களின் ஆசிச் செய்திகளுடனும் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச)

# அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப உருளைக்கிழங்கு விநியோகம்

யால கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள உருளைக் கிழங்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள 24 ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாகவும் வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எடுத்து வரப்பட்ட 100 மெற் றிக்தொன் உருளைக் கிழங்கும் மக்கள் தொகைக்கு ஏற்ப ப.நோ.கூ.சங்கங்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ உரு ளைக்கிழங்கின் ப.நோ. கூ.சங்கங்களின் விற் பனை விலை 86 ரூபாயாக நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

1,2 அங்கத்தவர்களுடைய குடும்பங்க ளுக்கு 250 கிராம் உருளைக்கிழங்கும் 3 ,4 அங்கத்தவர்களுடைய குடும்பங்களுக்கு 500 கிராம் உருளைக்கிழங்கும் 5ஆம் அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு கிலோ உரு ளைக் கிழங்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விநியோகம் சீராக நடைபெறு வதனை உரிய அலுவலர்களை நியமித்து மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலா ளர்கள், உதவி அரசாங்கஅதிபர்கள், கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோ ருக்கு அரசாங்க அதிபரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை வழங்கற்கட்டளைகளைப் பெற் றுக்கொள்ளாத மருதங்கேணி, நெடுந்தீவு, சங்கானை, கொடிகாமம், புங்குடுதீவு, நயினா தீவு, வேலணை, புலோலி, ஊர்காவற்றுறை, அனலைதீவு, காரைநகர் ஆகிய ப.நோ.கூ. சங்கங்கள் உடன் வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத் தில் பெற்றுக்கொள்ளுமாறும் உரியவாறு விநி யோகத்தினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப் பிக்குமாறும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறி யத்தந்துள்ளார். (5)

# விரைவில் கொழும்பு பயணம் பிரணாப் முகர்ஜி உறுதி

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வுகாண விரைவில் கொழும்பு செல்வதாக மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித் துள்ளார். புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்த ம.தி. மு.க., தேசிய வாத காங்கிரஸ், விடுதலை சிறுத் தைகள், மக்கள் உரிமை கூட்டமைப்பு, பெரி யார் திராவிட கழகம் ஆகிய கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் டெல்லியில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்தித்து பேசினார்கள்.

அப்போது இலங்கையில் நடைபெறும் போரை உடனடியாக நிறுத்த அந்த நாட்டு அரசை நிர்ப்பந்திக்கவேண்டும் என்று வற் புறுத்தினார்கள். கொழும்பு செல்லும் போது இலங்கை தமிழர் பிரச்சினைக்கு புதிய தீர்வு காண முயற்சிக்கப்படும் என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

# இன்று ஒரு தகவல்

## அசைவுகளும் அர்த்தங்களும்

ஒருவர் தன்னை குரு என்று சொல்லிக் கொண்டார். மௌன குரு. வாயே திறக்கமாட்டார்.

அவருக்கு இரண்டு சீடர்கள் இருந்தார்கள். அவர்கள்தான் வருபவர்களிடம் பேசுவர்ர்கள். விளக்கம் கொடுப்பார்கள்.

ஒரு நாள் சீடர்கள் இருவரும் எங்கேயோ வெளியில் போய் விட்டார்கள். அந்த நேரம் பார்த்து ஒருவர் அங்கு வந்தார். குருவிடம் போனார். "குருவே! புத்தர் என்றால் என்ன?" என்று கேட்டார்.

குருவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் உண்மையான குருவாக இருந்தால் அல்லவா புரியும்? திருதிருவென்று முழிக்கத் தொடங்கினார்.

இந்த நேரம் பார்த்து சீடர்கள் எங்கேயோ போய் விட்டார்களே... என்ன செய்வது? உதவிக்கு யாராவது கிடைக்க மாட்டார்களா... என்று சுற்றும் முற்றும் பார்த்தார். வந்தவர் இதைக் கவனித்தார்.

ஏதோ புரிந்து கொண்டவர் போல் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

" தர்மம் என்றால் என்ன சுவாமி?" என்றார். குருவுக்கு தர்மசங்கடமாகி விட்டது . நமது நிலைமை இப்படி ஆகி விட்டதே ... இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே! என்று நினைத்தபடியே விட்டத்தைப் பார்த்தார். பின்னர் குனிந்து தரையைப் பார்த்தார் அப்படியே உட்கார்ந்து கொண்டார்.

வந்தவர் உடனே அடுத்த கேள்வியைக் கேட்டார்." தியானம் என்றால் என்ன ?" என்றார்.

பாவம் என்ன பண்ணுவார் அந்தக் குரு ... பேசாமல் கண்ணை இறுக்கமாக மூடிக்கொண்டார். இவர் இப்படிச் செய்தும் வந்தவர் சளைக்கவில்லை. இன்னொரு கேள்வியும் கேட்டார்.

"ஆசீர்வாதம் என்றால் என்ன ?" என்றார்.

இவர் பார்த்தார். இப்படியே போனால் இவர் கேள்வி கேட்பதை நிறுத்த மாட்டார் என்று நினைத்துக் கொண்டு...எனக்கு ஒன்றுமே தெரியாது என்ற பாவனையில் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினார்.

வந்தவரின் முகத்தில் மகிழ்ச்சி. மன நிறைவுடன் எல்லாவற்றையும் புரிந்து கொண்டவர் போல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். போகும் வழியில் அந்தக் குருவின் சீடர்கள் இருவரையும் சந்தித்தார்.

"உங்களது குருவைத் தான் பார்த்து விட்டு வருகிறேன்." என்றார். "என்ன நடந்தது?" என்று கேட்டார்கள். இவர் விவரமாகக் கூறினார்.

" உங்கள் குரு எவ்வளவு பெரிய ஞானி தெரியுமா?" புத்தர் என்றால் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியும் இப்படியும் பார்த்தார் அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மக்கள் புத்தரை அங்கும் இங்கும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அங்கேயும் இங்கேயும் தேடிக் கண்டு பிடிக்க முடியாதுஎன்பதை அவர் செய்கை மூலம் உணர்த்தினார்.

அதன் பின்னர் தர்மம் என்றால் என்ன என்று கேட்டேன். அவர் மேலும் கீழும் ப ார்த்து "தர்மம் சமமானது. அதில் - உயர்வு தாழ்வு இல்லை" என்பதை உணர்த்தினார்.

அதன்பின் தியானம் என்றால் என்ன என்று கேட்டேன் கண்ணை மூடிக் கொண்டார். கண்ணை மூடிக் காணும் அற்புதம் தான் அது என்பதைப் புரிந்து கொண்டேன். கடைசியாக ஆசீர்வதிக்கப்படுவது பற்றிக்கேட்டேன். கைகளை நீட்டி உதவுவது தான் அது என்பதை இருகை விரித்து உணர்த்தினார்.

"எவ்வளவு பெரிய மகான் அவர்?" என்று சொல்லிவிட்டு போய்விட்டார் அவர். சீடர்கள் அதன்பின்னர் மெதுவாகக் குருவிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் குருவுக்குக் கோபம் வந்து விட்டது.

"எங்கே போய்த் தொலைந்தீர்கள்? நான் ஒருவனிடம் மாட்டிக் கொண்டு என்ன பாடு பட்டிருக்கிறேன் தெரியுமா?" என் றார்.

இது போலத்தான் நாம் சாதாரண மனிதர்களின் வேடங்களில் மயங்கிப் போய்விடுகிறோம். அவர்களுடைய பேச்சு - செய்கை - பார்வை இதிலெல்லாம் ஏதோ பெரிய தத்துவம் இருப்பதாக நினைத்துக்கொள்கிறோம்.

உண்மையில் அந்தத் தத்துவங்கள் யாருக்குச் சொந்தம்? நமக்குத் தான் சொந்தம். அவர்களுக்கில்லை. நாம் தானே அதை கற்பித்துக் கொண்டோம்.

நம்மை நாம் அடையாளம் கண்டு கொள்வதேயில்லை. நாம் யார் என்பது நமக்குப் புரிவதில்லை. அதனால் தான் அடுத்தவர்களைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம். சில வீடுகளில் கூட இது போன்ற சைகைகள் உண்டு.

சில குடும்பத்தவர்கள் தினமும் காலையில் கண்ணை மூடிக் கொண்டு... கை இரண்டையும் விரித்து வைத்து உட்கார்ந்து தியானம் செய்வது வழக்கம்.

எதற்காக அப்படி செய்கிறீர்கள் என்று ஒருவரைப்பார்த்துக் கேட்டேன். " இந்த மாதம் வாங்கிய சம்பளம் முழுவதும் தீர்ந்து விட்டது. இப்பொழுது என்கையில் ஒரு சதமும் இல்லை. புதிதாக எதுவும் செலவு வைத்து விடாதே!" என்பதற்காகத் தான் உள்ளங்கை இரண்டையும் விரித்துக் காட்டி அவர்களுக்கு உணர்த்துகின்றேன்! என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2010 ஆம் ஆண்டளவில் புற்று நோயானது

# உலக மக்களுக்கு பாரிய அச்சுறுத்தல்

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டளவில் புற்று நோயானது உலக மக்கள் அனைவருக்கும் மரண அச்சுறுத்தலாக இருக்குமென உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது உலக நோயாளர்களில் பெரும்பாலானோருக்கு மரணத்தை ஏற்படுத்தும் முதற்தர நோயாக இப்புற்று நோய் இனங்காணப் பட்டுள்ளது.

அத்தோடு இருதய நோய் இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் புகை யிலை பாவனை கூடுதலாக இரு ப்பதால்தான் புற்று நோயின் வீதம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகும்.

தற்போதைய உலகில் புகையிலை பாவிப்போரில் நூற்றுக்கு நாற்பது வீதமானோர் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்நிலையின் பிரகாரம் இவ் வருட இறுதிக்குள் உலகம் பூராகவும் புற்று நோய் பீடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை 12 மில்லியனாக இருக்குமெனவும் புற்று நோயால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை 07 மில்லியனாக இருக்குமெனவும் அவ் அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளது.

ஆண்டு தோறும் புற்று நோயினால் பிடிக்கப்பட்டவர்கள் மற்றும் அதன் மூலம் மரணிப்பவர்கள் நூற்றுக்கு ஒருவர் வீதம் அதிகரிப்பதாக கருதப்படுவதுடன் புற்று நோய் தமக்கு ஏற்பட்டிருப்பதை முன் கூட்டியே அறியாதிருப்போரது எண்ணிக்கை2030 ஆம் ஆண்டளவில் 27 மில்லியன் புற்று நோயாளர்கள் இனங் காணப்படுவதுடன் 17 மில்லியன் புற்று நோய் மரணங்கள் ஏற்படும் என்பது குறிப் பிடத்தக்கது. (5)

# டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர்

# அனைவருக்கும் பிறப்புச் சான்றிதழ்

(கொழும்பு)

"அனைவருக்கும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்" என்னும் திட்டத்தின் கீழ் பொது நிர்வாக அமைச்சும் பதிவாளர் நாயகம் திணைக்களமும் இணைந்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை இது வரை பெறாத அனைவருக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

சுமார் ஒரு இலட்சம் பேர் நாடு முழுவதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளதா நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் மொத்த மக்கள் தொகையினில் 94 வீதமானோர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுள்ளதாகவும் புதிய திட்டத்தின் கீழ் இந்த விகிதாசாரத்தினை மேலும் அதிகரிக்கவு ள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதேச செயலக மட்டத்துக்கு இத்திட்டத்தை விஸ்தரிக்கவுள்ளதாகவும் இதற்கென மேலதிகமாக 400 மாவட்ட பதிவாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் படவுள்ளதாகவும் பிரதேச செயலாளர்கள் ஊடாக பதிவாளர் திணைக்களத்துக்கு பொது மக்கள் விண்ணப்பித்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார். (5)

## இராசி பலன்

16.12.2008

(மார்கழி 1, செவ்வாய்க்கிழமை)

பூசம் முற்பகல் 11. 15மணிவரை

சதுர்த்தி பிற்பகல்2.32 மணிவரை

இராகுகாலம் 3.22- 4.52மணிவரை

சுபநேரம் 10.52- 12.22மணிவரை

சங்கடஹர சதுர்த்தி

| | |
|---|---|
| மேடம் | தாய்வழி உறவு, மனச் சஞ்சலம், சுபசெலவு, புதிய முயற்சி. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் வருகை, போசன சுகம், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | கடினவார்த்தை, அமைதிக் குறைவு, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| கடகம் | தெய்வ சிந்தை, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன சுகம். |
| சிங்கம் | எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, பிரயாணம், சயனசுகக் குறைவு. |
| கன்னி | முயற்சி கைகூடும், கீர்த்தி, கலந்துரையாடல், தெய்வதரிசனம். |
| துலாம் | அதிக பிரயாசை, போசன சுகம், புதிய தகவல், தேக நலன். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, திடீர் பயணம், அதிக செலவு. |
| தனுசு | கௌரவக் குறைவு, காரிய தடங்கல், வீண் பகை, போசன சுகம். |
| மகரம் | உறவினர் சந்திப்பு, செல்வாக்கு, எடுத்த கருமங்கள் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | ஆரோக்கியம், அதிகாரம், முயற்சி பலிதம், தன்னம்பிக்கை. |
| மீனம் | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், பணவிரயம், வேலைச்சுமை. |

வளவன்

# தாதியர் பயிற்சி மாணவர்களுக்கான கொடுப்பனவு

# ஒப்பந்தக் கூற்றின் பிரகாரம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தாதியர் பயிற்சிநெறியை மேற்கொண்டுவரும் முதலாம் வருட மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு அவர்களால் வழங்கப்பட்ட ஒப்பந்தக் கூற்றின் பிரகாரமே வழங் கப்படுவதாக தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர் தெரிவித் தார்.

இதன் பிரகாரம் முதலாம் வருட மாணவர்கள் மே மாதம் தமது கற்கை நெறியை ஆரம்பித்தனர் எனவும் ஆகஸ்ட் மாதமே தமது ஒப்பந்தக் கூற்றை சமர்ப்பித்தனர் எனவும் அவர் குறிப் பிட்டார்.

இதற்கமைவாக முதலாம் வருட மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு கடந்த செப்ரெம்பர் மாதம் வரையான 5 மா தங்களு க் கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக வும் தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார். (5)

# இலங்கையின் வர்த்தகம் 5,170 மில்லியன்

# அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையின் வர்த்தகம் கடந்த ஒக்டோபர் வரை 5 ஆயிரத்து 170 மில்லியன் அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சி கண்டிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நிதி நெருக்கடியைத் தொடர்ந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்தமை காரணமாக இவற்றின் சர்வதேச விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதே சமயம், இந்த மாதத்தில் இறக்குமதியின் அளவு குறைவடைந்துள்ள நிலையில் அடுத்த வருடத்திலும் வர்த்தகத்தில் வீழ்ச்சி நிலை தொடர்வதற்கு வாய்ப்பிருப்பதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் செப்டெம்பர் வரை தொழிலாளர்கள் வேலையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டமையானது இலங்கையின் வர்த்தகத்தில் 45 வீதமான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில் இவ்வருட இறுதியில் இலங்கையின் வர்த்தகம் மேலும் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சி அடையும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (5)

# திருவாசக விழா தொடர்பான பண்ணிசைப் போட்டிகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசகவிழா தொடர்பான பண்ணிசைப் போட்டி இம்மாதம் 28 ஆம் திகதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம் (2008 இல்), பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றை குறிப்பிட்டு பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் திருவாசக போட்டிக் குழு, சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச் சந்நிதி, தொண்டைமானாறு என்னும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.

தரம் 5,6 சிவபுராணம், தரம் 7,8 திருவெம்பாவை, தரம் 9,10 திருப்பள்ளி எழுச்சி எனும் விடயங்களில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளது. நடுவர்கள் கேட்கும் பாடல்களை மோகனராகத்தில் பாடிக் காட்டுதல் வேண்டும். அத்துடன் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களினதும் சமய பாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்து மூலம் பரீட்சிக்கப்படவுள்ளது.

இப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் ஜனவரி மாதம் 2ஆம் திகதி நடைபெறும் திருவாசக விழாவில் வழங்கப்படும் என சந்நிதியான் ஆச்சிரம திருவாசகப் போட்டிக் குழு அறிவித்துள்ளது. (ஓ-6-35)

# குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பெரும்பகுதி சேதம்

குடாநாட்டு விவசாயிகளுக்கென வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பெரும்பகுதி பாவிக்கமுடியாமல் பழுதடைந்துள் ளது. இந்தநிலை குறித்து விவசாயிகள் கவலையடைந்துள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யவிருக்கும் விவசாயிகளுக்கென முதல்கட்டமாக 520பெட்டி விதை உருளைக்கிழங்கு கப்பல் மூலம் காங்கேசன் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அண்மையில் வீசிய காற்று, மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் காங்கேசன்துறைமுகத்தில் கிழங்கை இறக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் திருகோணமலை துறைமுகத்திற்கு திரும்பிச் சென்ற கப்பல் காலநிலை சீரானதைத் தொடர்ந்து மீண்டும் காங்கேசன் துறைக்கு வந்தது. கப்பலிலிருந்து கிழங்கு இறக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கப்பலிலிருந்து இறக்கப்படும் கிழங்குகள் நேரடியாக திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்துக்கு கொண்டு வரப்பட்டு அங்கு வைத்து உடனுக்குடன் விவசாயிக ளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

காலநிலை சீரின்மை காரணமாக கப்பலிலிருந்து கிழங்கு இறக்குவதிலேற்பட்ட தாமதத்தால் விதை கிழங்கில் பெரும்பாலான கிழங்குகள் அழுகிய நிலையில் பழுதடைந்திருக்கின்றன. இதனால், விவசாயிகளுக்குத் தேவையான விதைகிழங்கை வழங்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. (ஓ-5)




## மின்சார திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் கடும் மழையினால் பாதிக்கப்பட்டிருந்த மின்சார வேலைகள் அனைத்தும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மின்சாரசபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பின் காரணமாகவே இவ்வேலைகள் விரைவில் பூர்த்தியடைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் திருத்தவேலைகள் ஏதாவது இருக்குமிடத்து மின்சாரசபைக்கு உடனடியாக அறிவிக்குமாறும் அவர் கூறியுள்ளார். அத்து டன் வழமையாக அமுல்படுத் தப்படும் மின் தடை மறு அறிவித்தல் வரை தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ)

## புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2008) சித்தியடைந்த தமது சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக அங்கத்துவ சங்கங்களிடம் இருந்து விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பதில் மாவட்ட செயலாளர் சு.நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## க.பொ.த.சாதாரண பரீட்சைகள் சிறப்பாக நடைபெறுகின்றன

க.பொ.த(சா/த) பரீட்சைகள் அனைத்தும் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பரீட்சை நிலையங்களிலும் உள்ள ஒப்புநோக்குநர்கள், மேற்பார்வையாளர்கள் அனைவருக்கும் பரீட்சை அறிவுறுத்தல்கள் அனைத்தும் வழங்கப்பட்ட பின்னரே பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கணித பாடப் பரீட்சையின் போது மாணவர்களுக்கான மடக்கை அட்டவணைகள் போதுமானதாக வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

## சமுதாய தலைவர் போட்டியில் இரண்டாம் சுற்றுக்கு தெரிவு

(கோண்டாவில்)

தேசிய இளைஞர் சமுதாய தலைவர்களுக்கு விருது வழங்கும் விழா கடந்த மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழாவில் கலை, கலாசாரம், மனித உரிமைகள், பெண் உரிமைகள், நிலைத்த சூழல், விவசாயமும் நீர்ப்பாசனமும் ஆகிய ஐந்து துறைகளில் பங்குபற்றி கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ச.நிமலன் இரண்டாம் சுற்றிற்கு தேர்வு பெற்றுள்ளார். (ஓ-36)

## 'ஞானச்சுடர்' வாசகர் போட்டி

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகை வாசகர் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதன்பிரகாரம் இதற்கான 25 வினாக்கள் கார்த்திகை மாத இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான விடைகள் யாவும் இதுவரை வெளிவந்த ஞானச்சுடர் இதழ்களில் வெளியான செய்திகளில் பிரசுரமாகியுள்ளது. இப்போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம்.

ஆனால் அவை தனித் தனியாக அனுப்பப்பட வேண்டும். விடைகள் அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை வாசகர் போட்டிக் குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு ஜனவரி மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமோ, நேரிலோ கையளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-35)

## விவசாயிகளுக்கான மரக்கறி விதைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாயிகளின் நன்மை கருதி கன்னறுவ விவசாயப் பண்ணை மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இருந்து பயற்றை, வெண்டி, புடோல், மிளகாய், தக்காளி, கத்தரி போன்ற விதைகள் விமானம் மூலம் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக கமநல சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஓ)

## யாழ்.கல்வி வலய அதிபர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பாகக் கோரப்பட்ட விபரங்களை நேற்றுவரை ஒப்படைக்காத யாழ்.வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னர் அவற்றைத் திட்டமிடற் பிரிவில் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)



யா/முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கு பேராசிரியர் அ.சண்முகதாசும் கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் தமது வாழ்நாள் சேகரிப்பு நூல்களில் ஆயிரம் பிரதிகளை அன்பளிப்புச் செய்தனர். இந் நூல்களை கலாநிதி மனோன்மணி சண்முக்தாஸ் பாடசாலை அதிபர் ந.சத்தியபாலனிடம் கையளிப்பதையும், மாணவர்கள் நூல்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையில் அமைந்துள்ள சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இப்புனித தெய்வீக நிகழ்வில் கலந்து கொண்டு திருவருள் பெற்றுய்யுமாறு இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது. (ஓ-3)

## விபரம் கோரல்

(மருங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' மலரின் வளர்ச்சிக்கு 2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை ஆக்கங்களை அளித்தோர் தங்களது சரியான முகவரியையும், ஆக்கம் இடம்பெற்ற மாதம், வருடம் ஆகியவற்றையும் எழுதி கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுமாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை கேட்டுள்ளது. (ஓ-35)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டை ஒன்று வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேசிய அடையாள அட்டை நாகர் கோவிலைச் சேர்ந்த சச்சிதானந்தம் சந்திர மோகன் (822011551V) என்பவருடையதாகும். உரியவர் தகுந்த அடையாளங்களைக் காண்பித்து அலுவலக நேரத்தில் வலம்புரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஓ)

## மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதி நடத்தப்படவுள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கான பயிற்சி வகுப்பும், கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி பரீட்சையில் தோற்றவுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ)

## ஸ்ரீசாரதா தேவியின் 156 ஆவது ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இராமகிருஷ்ண சமிதி நடத்தும் ஸ்ரீசாரதா தேவியின் 156 ஆவது ஜெயந்திவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் ஸ்ரீஇராம கிருஷ்ண சமிதியின் உபசெயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் மருத் துவபீட பொதுமருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் 'அன்பே உருவான அன்னை' எனும் விடயம் பற்றிய யாழ்.போதனா வைத்தியசாலை மயக்கவியல் நிபுணர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தியின் ஆன்மீக உரை, இணுவில் முருகன் ஆலய இளந் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் "அன்றும், இன்றும், என்றும்" எனும் நாடகம் ஆகியன இடம் பெறும்.

தொடர்ந்து பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் மற்றும் யோகாசன, தியானப் பயிற்சியை முடித்த மருத்துவபீட மாணவர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்குமான சான்றிதழ் வழங்கலும் இடம்பெற வுள்ளன. (ஓ-2)

# இலங்கையில் தமிழர் 13

இந்நூலாசிரியர் தொல்லியலாய்வு நடத்தியபோதும் பின்னரும் இத்தகைய மனப்பான்மையையும் அதன் விளைவுகளையும் கண்டும் கேள்வியுற்றும் கவலையுறும் நிலை பலமுறை ஏற்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் சிலர் தம் இனக் குழுவின் நன்மைக்காகச் சில தொல்பொருட்களை அழிப்பதாக எண்ணிச் செயற்படும் போது, உண்மையில் தம் இனக்குழுவின் அருஞ் செல்வத்தையே அறியாமையால் அழித்துவிடுகின்றனர். இலங்கையில் வேறெங்காவது கிடைக்காத, தமிழ்நாட்டிலும் கிடைக்காத ஓர் அரிய தொல்பொருட் செல்வமாக ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன் அதிகாரம் செலுத்திய குறுநில மன்னன் ஒருவனின் சவ அடக்கமும் அவனுடைய முழு எலும்புக் கூடும் கிடைத்தன.

இன்று அந்த எலும்புக்கூடு எங்கே? இலங்கையில் வேறெங்காவது காணப்படாத சிறப்புவாய்ந்த, கல்வட்டங்களைக் கொண்ட ஆதி இரும்புக்காலச் சவ அடக்கங்கள் மாமடுவில் காணப்பட்டன. இன்று அவை இங்கு இல்லை. இவற்றைப் பாதுகாப்பதற்குத் தொல்லியல் திணைக்களம் தவறியமைக்குக் காரணம் என்ன? பழைய எழுத்துக்களைப் படிக்கத் தெரியாத சிலர் சில கல்வெட்டுக்களைத் தப்பாகத் தம் பகைவர் இனக் குழுவின் மொழிக் கல்வெட்டுக்கள் என எண்ணி அழித்துள்ளனர். அவ்வாறே சில அரிய சிலைகளைத் தம் பகைவர் மதத்துக்கு உரியவை எனத் தப்பெண்ணம் கொண்டு உடைத்தெறிந்தோ திரும்பப் புதைத்தோ மறைத்து விட்டனர். இவ்வாறாக அரசியல் தொல்லியலைப் பெரிதும் பாதிக்கின்றது.

**கல்வெட்டுக் கண்டுபிடிப்புகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையின் பிரித்தானிய நிர்வாகம் தொல்லியலில் கவனம் செலுத்தியபோது, பழைய கல்வெட்டுக்களைப் படித்து வெளியிட ஒரு ஜெர்மன் அறிஞரை நியமித்தது. இதற்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் தொல்லியல் அய்வுத் திணைக்களத்தில் ஒரு நிரந்தரக் கல்வெட் டியலாளர் நியமனம் பெற்றிருந்தும் ஒரு முறையான திட்டத்திற்கு அமைய நாட்டிலுள்ள பழைய கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்துப் படியெடுத்துப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை ஒருபோதும் எடுக்கப்படவில்லை. அநுராதபுரம் பொலநறுவை ஆகிய தொல் நகரங்களுக்கு அப்பால் கிடைத்த கல்வெட்டுக்கள் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டவையே. தமிழ்க் கல்வெட்டுக்களைப் பொறுத்த மட்டில் பெருமளவுக்கு இக்கூற்றுப் பொருத்தமானது.

இந் நூலாசிரியர் 1960 களிலும் 1970 களிலும் நடத்திய மேலாய்வு பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சில முக்கியமான தமிழ்க் கல்வெட்டுக்களைக் கண்டறிய உதவியது. இந்த இரு தசாப்த காலத்தில் முதன்முறையாக வட மாகாணத்தில் சோழர் ஆட்சிக்காலத்து தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கீழ்மாகாணத்தில் கிடைத்த கல்வெட்டுக்களுள் ஒன்று சோழர் ஏற்படுத்திய நிர்வாக அமைப்புப் பற்றி முக்கியமான தரவுகளைக் கொடுக்கும் ஒரு கல்வெட்டாகும். வடமாகாணத்தில் ஒரு மட்பாண்டத் துண்டில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டு மற்றும் ஒரு முத்திரையில் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டு ஆகியவையும் இக்காலப் பகுதியில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டன. இவ்விரண்டும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை கிடைத்த மிகப் பழைய கல்வெட்டுக்கள். இவற்றின் பின், 1980களிலும் 1990களிலும் சில கல்வெட்டுக்கள் யுனெஸ்கோ பண்பாட்டு முக்கோண வலயத்திலும் வேறிடங்களிலும் கிடைத்துள்ளன.

மேலும், கல்வெட்டியல் ஆய்வுகளின் பயனாகக் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் பழைய பிராமிக் கல்வெட்டுக்களுக்குப் புதிய விளக்கங்கள் சில கொடுக்கப்பட்டன. அத்துடன் பிராமி எழுத்தைப் பொறுத்தும் சில புதுக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்நூலில் வெளிப்படும் கண்ணோட்டங்களுக்கு ஏதுவாய் இருந்துள்ளன. இவற்றுள், கலாநிதி ஸத்தாமங்கள கருணாரத்ன பிராமி எழுத்துக்கள் பற்றித் தெரிவித்த கருத்துக்களும் பேராசிரியர் ஸுதர்ஷன் ஸெனெவிரத்ன பிராமிக் கல்வெட்டுககளில் வரும் சில சொற்களுக்குக் கொடுத்த விளக்கங்களும் முக்கியமானவை. இவற்றைப்போன்று, இந்தியக் கல்வெட்டியல் அறிஞர்களுள் முன்னிலையில் நிற்கும் ஒருவரும், தமிழிப் பிராமிக் கல்வெட்டுக்களைப் படித்து ஆய்வுசெய்து வெளியிட்ட நிகரற்ற தமிக் கல்வெட்டியலாளருமாகிய பேரறிஞர் ஐராவதம் மகாதேவனின் பங்களிப்புகளும் முக்கியமானவை. தமிழ்நாட்டின் மிகப் பழை கல்வெடடுச் சான்றுகளைப் பயன்படுத்த மட்டுமன்றி இலங்கையிலிருந்து மறுவளமாகத் தென்னிந்தியாவுக்குப் பரவிய செல்வாக்கினை விளங்கிக்கொள்ளவும் மகாதேவனின் ஆய்வுகள் உதவியுள்ளன.

மட்பாண்டத் துண்டுகளில் கீறப்பட்டுள்ள எழுத்துக்களை ஆய்வுசெய்யும் முயற்சிகளும் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றுள்ளன. பிராமி எழுத்துக்களையும் வேறு சின்னங்களையும் கொண்ட மட்பாண்டத் துண்டுகள் பல தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுத் தொடர்புக்குச் சான்று பகரும் வகையில் பிராமி எழுத்துப் பொறித்த சில மட்பாண்டத் துண்டுகள் மேற்காசிய எகிப்தியத் துறைகளிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இப்படியான சான்றுகள் அண்மைக் காலம் வரை வரலாற்றை எழுதுவதற்கு அதிகம் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் பலர் இவற்றைப் படித்து ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தியுள்ளனர். இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே ஆதி வரலாற்றுக் காலத்தில் இருந்த பண்பாட்டு உறவுகளையும் பொருளியல் சார்ந்த உறவுகளையும் அறிவதற்கு இச் சான்றுகள் உதவுகின்றன. அத்துடன் மேற்காசிய எகிப்தியத் துறைகளுடன், சிறப்பாகக் கிரேக்க, உரோம வர்த்தகர்களுடன் தென்னிந்திய, இலங்கை வர்த்தகர்கள் கொண்டிருந்த தொடர்புகளை அறிவதற்கும் இவை உதவுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் கே. ராஜன், பேராசிரியர் ஓஸ்மண்ட் போபே ஆரச்சி ஆகியோர் இலங்கையில் ஒரு தொல்லியல் தலத்தில் கிடைத்த மட்பாண்ட ஓட்டுக் கீறல்களைத் தமிழ்நாட்டுத் தொல்லியல் தலம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட ஓட்டுக் கீறல்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தனர். இரண்டுக்கும் இடையில் நெருங்கிய ஒற்றுமைகள் இருப்பதை அவர்கள் காட்டினர். தமிழ்நாட்டில் கிடைத்த மட்பாண்ட ஓட்டுக் கீறல்கள் சில இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களின் எழுத்து, மொழி, ஆகியவற்றின் செல்வாக்கினைக் காட்டுகின்றன என வேறு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆய்வு நடத்திய கலாநிதி ப.புஷ்பரட்ணம் பல மட்பாண்ட ஓட்டுக் கீறல்களைப் பற்றி எழுதியுள்ளார். இவற்றுள் சில தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் எனவும் அவர் அடையாளம் கண்டுள்ளார்.


அண்மைக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட மட்பாண்ட ஓட்டுக் கீறல்களுள் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியவை அனுராதபுரத்தில் ஸிரான் தரணியகல, எவ்.ஆர்.ஆல்ச்சின், றொபின் கோனிங்ஹம் ஆகியோர் கண்டு பிடித்தவை என்பதில் ஐயமில்லை.

இவை பொ.ஆ.மு.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவை கண்டுபிடிக்கப்பட்ட பின் 2004 இல் ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட சில் மட்பாண்ட ஓடுகளில் உள்ள பிராமி எழுத்துக்களும் பொ.ஆ.மு.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் காலக் கணிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன்பின், 2006 இல் தமிழ்நாட்டில் ஆண்டிப்பட்டியில் கிடைத்த வீரக்கற்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பொ.ஆ. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனப் பேராசிரியர் ராஜன் கணித்துள்ளார்.

இக் கல்வெட்டுக்கள் அனைத்தும் மிகவும் முக்கியமான வகையில் தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்துக் கல்வெட்டாய்வுக்கும் வரலாற்றியலுக்கும் உதவும் புதிய கண்டு பிடிப்புக்கள் எனலாம், (தொடரும்)

# கல்வியில் சமத்துவமின்மை ஒரு தொடர்கதை 4



வறிய பிள்ளைகளின் ஒப்பீட்டளவான கீழ்க்கல்வி அடைவதற்கான பொருளாதாரக் காரணம் என்னவெனில் பிள்ளையின் சிரமத்தின் 'வாய்ப்புச் செலவு' தொடர்பாக ஆரம்பக் கல்வியின் தனிப்பட் அதியுயர்செலவேயாகும். இது வசதியுள்ள குடும்பத்தில் உள்ள பிள்ளைக்குள்ளதை விட வறிய குடும்பத்திலுள்ள பிள்ளைக்கு கூடியதாகும்.

கல்வி இலவசமாக இருந்தபோதிலும் வறியோர் பிள்ளையின் பாடசாலைக் காலத்திற்காக 'சிரம காலத்தை' இழக்க நேரிடுகிறது. இது குடும்பத்திற்கு ஓர் இழப்பாகும்.

வறிய மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியின் எதிர்பார்த்த பயன்கள் மிகக் குறைவாகும் என 'டொரடோ' காண்கிறார். எனவே இக் காரணிகள் வறியோருக்கு மிகக் குறைந்த மீளளிப்பு விகிதத்திற்கு வழிப்படுத்துகின்றன.

இதனால் அவர்கள் பாடசாலையை விரைவில் இடையில் விட்டுச் செல்லக்கூடும். இவ்வாறு இலவசக்கல்வி, சர்வசன ஆரம்பக் கல்வி என்பன எமது நாட்டில் இருந்த போதிலும், கிராமப்புற பிள்ளைகள் உயர் கல்விக்குச் சென்றது மிகக் குறைவாகும். ஆனால் அவர்களது பாடசாலையில் ஒப்பீட்டளவாக மிகக் குறைந்த அடைவு அறிவுசார் ஆற்றல்களின் குறைவுகளுடன் எவ்விதத்திலும் தொடர்புபட்டதல்ல.

இவ்வாறு மிகக்கூடிய சமனில் வருமானப் பரம்பல் இடைநிலைப் பாடசாலைப் போதனை, உயர்கல்வி முறையை குறிப்பாக இடை, உயர் நிலை களில் சமனிலியை அதிகரிப்பதற்கும் வறுமையை நிலைப்படுத்துவதற்கும் தொழிற்படுகின்றன எனக் கருதலாம்.

**கிராமிய அபிவிருத்தி**

எந்தவொரு வெற்றிகரமான கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தினதும் முக்கிய கூறொன்றை விவசாய அபிவிருத்தி பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பொதுவாக இலங்கையில் 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களுள் பெரும்பாலானோர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விசாய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

மேலும் கிராமிய அபிவிருத்தியோடு தொடர்புபட்ட வேறு பல பிரச்சனைகளும் உண்டு. அவற்றுக்கும் வித்தியாசமான வலியுறுத்தல்கள் தேவை. கிராமிய அபிவிருத்தியானது சமநிலையான பொருளாதாரத்திற்கும், சமூக விருத்திக்கும் இட்டுச் செல்லக் கூடிய ஒன்றிணைந்த இயல்பைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

உண்மையில் முறைசார் , முறைசாராக் கல்வியுடன் பிணைக்கப்பட்டுள்ள பண்ணையிலும் பண்ணைக்கு வெளியேயும் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் தன்மை, மற்றும் சுகாதாரம், போசாக்கு ஆகியவற்றின் மேம்பாடு போன்ற அம்சங்கள் விரிவான இலக்குகளை நோக்கிச் செயற்படுதலாகும்.

கிராமப் புறங்களில் அநேகமாக ஆரம்ப நிலையில் மேலோங்கி இருக்கும் முறைசார் கல்வி சிறந்த வெளியீடுகளையும், பிரதி விளைவு களையும் பெறுவதற்கு மேற் குறித்த இலக்குகள் தொடர்பாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக தற்போதைய கல்வி வேலைத் திட்டங்கள் மேற்கூறிய இலக்குகளில் அநேகமானவற்றை அடையக் கூடிய வகையில் வழிப்படுத்தப்பட்டும் திட்டமிடப் பட்டும் இல்லை எனக் கூறலாம்.

உண்மையில் இம்முறைகள் அநேகமாக அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து பிரதி பண்ணப்பட்டனவாகும். பிள்ளைகளை புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கும், இடைநிலைக் கல்விக்கும் தயாராக்கும் மேலோங்கிய நோக்கங்கள் கூட கிராமப் புறங்களையும், வளம் குறைந்த சமூகங்களையும் பொறுத்தமட்டில் அடையப் பெறவில்லை.

எனவே கிராமப் புறங்களை மேம்படுத்துவதற்காக கல்வியின் பங்களிப்பு மிக மிகக் குறைவாகும். அபிவிருத்தியாளர்களின் தேவைகளுக்கும், கல்வி முறைமைக்கும், பொருளாதாரத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியை இணைக்கும் பணி ஆரம்ப நிலையில் தொடங்கப்பட வேண்டும். இவ்விடைவெளியை இணைப்பதற்கான வழி வகைகளை கல்வியாளர்கள் விதந்துரைத்துள்ளனர்.

இவர்கள் கிராமிய ஆரம்ப பாடசாலையின் நான்கு அடிப்படைச் செயல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். (மலஸ் சிஸ்கும் - 1976) அச் செயல்களை அடையப் பெறல் பெறுமதி வாய்ந்த பணியாகும். ஏனெனில் அது கிராமப் புறங்களிலும், வளம் குறைந்த சமூகங்களிலும் காணப்படும் தற்போதைய சவால்கள் சிலவற்றை பூரணமாகத் தீர்ப்பன. அவை யாவன,

அ) அடிப்படைத் திறன்களான வாசிப்பு, எழுத்து, எண்கணிதம் என்பவற்றைக் கற்பித்தல்.

ஆ) கிராமிய அபிவிருத்தியினதும் முழுமையான அபிவிருத்தியினதும் இலக் கிற்கு ஒத்திருக்கையான உயர் சார்புகளை யும், சிந்தனைக் கோலங்களையும் உண்டாக்குதல்.

இ) கிராமிய அபிவிருத்திக்கு வித்திடல்

ஈ) மீத்திறன் மாணவர்கள் இடைநிலைக் கல்வியைப் பெற வாய்ப்பளித்தல்.

எனினும் இவ்வம்சத்தின் பொருளுடைமைத்தன்மை பற்றி சிலர் ஐயங் கொண்டுள்ளனர்.

கிராமப்புறங்களில் ஆரம்பக் கல்வியின் அடிப்படைப் பிரச்சனைகள் சார்பாக, கிராமப்புறங்களில் தமது வாழ்நாளைக் கழிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கான போதனையின் அதியுயர் முன்னுரிமைப் பகுதிகள் எழுத்தறிவு, அடிப்படை எண்கணிதத் திறன்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளனவா? என்பது போன்ற வினாவும் எழுப்பப்பட்டுள்ளது.

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை


மேலும், ஆரம்ப மட்டத்தில் சிறிது காலம் கற்ற பின் இடையில் விட்டுச் செல்லும் பிள்ளைகளின் இலாபங்கள் யாவை? போன்ற வினாவும் எழுகிறது.

இவ்வினாக்களுடன் தொடர்பு டைய விடைகள் ஆசிரியர் பயிற்சியுடன் தொடர்புபட்ட வேறு வினாக்களையும் எழுப்பும். (தொடரும்)

# நெல் எரிவந்த நோயைக் கட்டுப்படுத்துவோம்

யாழ்.மாவட்டத்தில் 9357.2 கெக்ரேயர் விஸ்தீரணத்தில் நெல்செய்கை பண்ணப்பட்டுள்ளது. நவம்பர் 25, 26ஆம் திகதிகளில் பெய்த கனமழை நெற்செய்கையில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பினால் வளர்ச்சி குன்றி நலிந்து காணப்படும் பயிர்களில் தற்போது எரிவந்த நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சரசாலை வடக்கில் முள்ளிவெளி, ஐயனார் கோவிலடிவெளி, சரசாலை தெற்கில் மாத்தளாய்வெளி, நுணுவில்வெளி ஆகிய வயல் வெளிகளில் இதன் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது. BG-406, AT-402, $H_4$ வர்க்கங்கள் இந் நோயால் தாக்கப்பட்டுள்ளன.

### நோய் பற்றிய அறிமுகம்



இலையில் எரிவந்தம்

நெற் பயிரைப் பாதிக்கும் முக்கிய நோய்களில் நெல் எரிவந்தமும் ஒன்றாகும். இந்நோய் நாற்றுப் பருவத்திலோ அல்லது பூக்கும் பருவத்திலோ பாதிப்பினை ஏற்படுத்தும் போது முழுப் பயிருமே அழியலாம். இது ஒரு பங்கசினால் ஏற்படுத்தப்படுகின்றது.

இந்நோய் ஏற்படுத்தும் பங்கசுக்களின் வித்திகளால் இலைகள் மட்டுமல்லாது இலை மடல், கணு, கதிரின்கழுத்து, மணிகள் போன்றவற்றிலும் பாதிப்பு ஏற்படும்.

இலைகளில் தோன்றும் புள்ளிகள் நாளடைவில் நீட்சிய டைந்து கூம்பு வடிவாக மாறும். இப்புள்ளி களின் நடுவில் வெள்ளை அல்லது சாம்பல் நிறமாகக் காணப்படும். இப்புள்ளிகளைச் சுற்றி கபில நிறமாக அல்லது கபிலச் சிவப்பு நிறமாகக் காணப்படும். புள்ளிகளின் நிறம், வடிவம் என்பன காலநிலை, பயிர் வயது, எதிர்ப்புத் தன்மை என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும்.

இலை களில் இப் புள்ளிகள் ஒன்று சேர்ந்து உலர்ந்து வைக்கோல் நிறத்தில் காணப்படும் இதன்காரணமாக நிரம்பாத மணிகளும், முதிராத மணிகளும் தோன்றும்.

மணிகளில் இதன் தொற்று ஏற்படும் போதுஆழமான கபில நிறப் புள்ளிகள் தோன்றும் இதனால் மணிகளின் தரம் குறைவதுடன் விதை நெல்லாக மறுபோகத்தில் பாவிக்க முடியாத நிலையும் ஏற்படும்.

கதிரின் கழுத்துப் பகுதியில் தொற்று ஏற்படின் கதிர்கள் சரியும், அறுவடையின் போது கதிர் முறிந்து விளைவு இழப்பை ஏற்படுத்தும்.



கழுத்து எரிவந்தம்

**பங்கசு தொற்றுவதற்கான சாதகமான நிலைமைகள்**

- காலை நேரத்தில் உயர் சாரீரப்பதன் -(90%)
- குறைந்த இரவு வெப்பநிலை -(20 °C - 24°C)
- மழையுடன் கூடிய மப்புமந்தாரமான நிலை
- இரவில்பனிஇருத்தல்
- சிபார்சுக்கு மேலதிகமான யூரியாவை இடு தல்.

தற்போதைய சாரீரப்பதன் இழிவு வெப்ப நிலை என்பன அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை1: சாரீரப்பதன், இழிவு வெப்ப நிலை**

| திகதி | சாரீரப்பதன் % | இழிவு வெப்பநிலை °C |
|---|---|---|
| 1.12.2008 | 75 | 24.0 |
| 2.12.2008 | 65 | 19.5 |
| 3.12.2008 | 67 | 21.7 |
| 4.12.2008 | 74 | 22.0 |
| 5.12.2008 | 70 | 26.1 |
| 6.12.2008 | 87 | 23.0 |
| 7.12.2008 | 97 | 24.1 |

(காலநிலைத்தகவல்: -வானிலை அவதான நிலையம், நீர்வேலி.)

### முகாமைத்துவ முறைகள்

*1.பயிராக்கவியல் முறைகள்*

- களைகள் வரம்புகளிலும், பயிர்களுக்கிடையிலும் இருப்பின் மாற்று விருந்து வழங்கிகளாக செயற்பட்டு வித்திகள் சாதகமான நிலையில் பயிரில் தொற்ற வாய்ப்பளிக்கும்.

எனவே வரம்புகளையும் வயலையும் நெற் சப்பி, கோழிச் சூடன், காட்டுக் குரக் கன் போன்ற களைகள் இன்றிப் பராமரிக்க வேண்டும்.

- யூரியாவை அதிகளவு பாவிப்பதால் ஏற்கனவே நலிவடைந்துள்ள பயிர்களின் கலங்கள் நீட்சியடைவதுடன், கலச்சுவர் மென்மையடைவதால் இலகுவில் பங்கசு வித்திகள் தொற்றுவதற்கு வாய்ப்பளிப்பதாக அமையலாம். எனவே வரம்பு மட்டத்திலும் பார்க்க நீர் குறைவாக உள்ள வயல்களிற்கு 8 ஆம் வாரம், $3\frac{1}{2}$ மாத நெல் வர்க்கத்திற்கு 20கி.கி.யூரியாவும், 10கி.கி. மியூறியேற் ஒப் பொட்டாசும், $4\frac{1}{2}$ மாத நெல் வர்க்கத்திற்கு 35 கி.கி.யூரியாவும் 10கி.கி மியூறியேற் ஒப் பொட்டாசும் கலந்து இடவும்.

*வெள்ளத்தினால் முற்றாக மூடப்பட்டு வெள்ளம் வடிந்த பின் வெளித்தெரியும் இலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே வெள்ளம் வடிந்து இலைகள் வெளியில் தெரியும் வயல்களுக்கும், நோயினால் பாதிக்கப்படாத வயல்களுக்கும் முன்னெச்சரிக்கையாக அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ள பங்கசு நாசினிகளில் ஒன்றை விசிறவும். இரசாயனங்களை தொடர்ச்சியாக பாவிக்க வேண்டாம்.*

*2. இரசாயன முறை*

விதைத்ததில் இருந்து பாற்பருவம் வரை ஒழுங்காக கண்காணிப்பது அவசியமானது. நோய்த் தொற்று அறிகுறி அவதானிக்கப்பட்டால் கீழ் குறிப்பிடும் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளில் ஒன்றை விசிறுதல் வேண்டும்.

**அட்டவணை 2:சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினிகள்**

| பங்கசு நாசினி | கலவை அளவு | 16 லீற்றர் தாங்கிக்கு | ஏக்கருக்கு தேவையான அளவு |
|---|---|---|---|
| பியுஜி –வண் (ஐசோபுரோத்தியோலேன்) 400 கிராம் /லீற்றர் | 25 மி.லீ .10 லீற்றர் நீரில் | 40 மி.லீ | 400 மி.லீ |
| பவஸ்ரின்(காபெண்டசிம் 50 %) | 07கிராம் .10 லீற்றர் நீரில் | 11 கிராம் | 200 கிராம் |
| காபென்டசிம்500 கிராம் /லீற்றர் | 07 மி.லீ .10 லீற்றர் நீரில் | 11 மி.லீ | 200 மி.லீ |

**க.தனபாலசிங்கம்**
பாடவிதான உத்தியோகத்தர் (பயிர் பாதுகாப்பு),
பிரதி விவசாயப் பணிப்பாளர்( விரி)அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# ஏகாதிபத்திய இராச்சியமொன்றை உருவாக்குவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கனவு

## ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராட்சத பேய்களைப் போன்று செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் மற்றும் உயர் நீதிமன்றம் போன்றவை மீது பல்வேறு வழிகளில் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஹெட் ஜிங் ஒப்பந்தத்தை ரத்துச் செய்தமை, நியாயமற்ற வரி முறையை ரத்துச் செய்தமை, மின்சாரக் கட்டணங்களை குறைக்குமாறு உத்தரவிட்டமை என அரசாங்கத்திற்கு எதிரான வகையில் உயர் நீதிமன்றம் பல்வேறு தீர்ப்புக்களை அண்மையில் வழங்கியிருந்தது.

இதன் காரணமாகவே, தமக்கு நீதவான் ஒருவருடைய அதிகாரம் கூட இல்லை என ஜனாதிபதி கவலை வெளியிட்டிருந்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உயர் நீதிமன்றத்தின் தலையீடற்ற ஓர் ஏகாதிபத்திய இராச்சியமொன்றைக் கட்டியெழுப்புவதே மஹிந்தராஜபக்ஷவின் கனவு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலி சமனலகல பகுதியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அனுர குமார திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி தற்போது தனக்கென ஓர் தனியான படையணியை உருவாக்கியுள்ளார்.

ஜே.ஆர். ஜயவர்த்தனவிற்கோ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கோ இவ்வாறான ஒரு படையணி இருக்கவில்லை. உலகின் சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்ட சதாம் ஹுசைன், இடிஅமீன், மாகோஸ் போன்றவர்களுக்கு தனியான படையணி காணப்பட்டதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-5)

## மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளத் தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழு உறுப்பினர்கள் சிலர் மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த உறுப்பினர்களை கட்சியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய துணைத் தலைவர் ருக்மன் சேனாநாயக்க இந்தக் குழுவிற்கு தலைமை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ஐக்கியதேசியக் கட்சியில் மீண்டும் இணைந்துகொள்வது குறித்து குறித்த உறுப்பினர்கள் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ-5)

# சிற்றூர்திகளை இயங்கச் செய்யக்கூடிய புதிய வகை எரிபொருள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிற்றூர்திகள் இயங்கும் புதிய வகை எரிபொருள் ஒன்றினை சுவீடன் நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஐதரசன் வாயுவில் நிரப்பப்பட்ட சிறிய பந்துகளைக் கொண்டு சிற்றூர்திகளை இயக்கச் செய்யமுடியுமென அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். சிற்றூர்திகள் இயங்க ஆரம்பிக்கும் போது இவ்வாறு வாயு நிரப்பப்பட்ட பந்துகள் சிதைவடைந்து அதில் நிரப்பப்பட்ட வாயு வெளியேறுவதன் ஊடாக சிற்றூர்தியின் இயந்திரம் இயக்கப்படுவதாக அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இவ்வாறு வெளியாகும் வாயு பக்க விளைவுகள் அற்றவிதமாக சூழலுடன் கலப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக் கண்டுபிடிப்பு வர்த்தகரீதியாக சந்தைக்கு வரும் பட்சத்தில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதுடன் சூழலுக்கு மாசு ஏற்படாது எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ஓ)

# அரசினர் வைத்தியசாலைகளில் தரம் குறைந்த மருந்துப்பொருட்கள்

## -அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

அரசினர் வைத்தியசாலைகளிலுள்ள பெரும்பாலான மருந்துப் பொருட்கள் தரம் குறைந்தவையென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இத்தகைய மருந்துப் பொருட்கள் வைத்தியசாலைகளில் பன்படுத்தப்படுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என சங்கத்தின் பிரதிச் செயலாளர் வைத்திய கலாநிதி உபுல்குணசேகர தெரிவித்தார். இறக்குமதி செய்யப்பட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் அண்மைக் காலமாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களின் தரத்தினைப் பரிசோதிப்பதற் கான உரிய முறைமையொன்று இல்லாமையே இதற்குக் காரணமென வைத்திய கலாநிதி உபுல்குணசேகர தெரிவித்தார். மருந்துப்பொருட்களின் தரம் தொடர்பாக கண்டறிவதற்கு முன்னர் பெருமளவான நோயாளர்கள் அதனைப் பயன்படுத்தி விடு வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி அதுல கஹநெனிய கருத்துத் தெரிவிக்கையில்,

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் குற்றச்சாட்டு ஆதாரமற்றதெனவும் தரம் தொடர்பான பரிசோதனைகளின் பின்னரே மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அது தொடர்பான முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் உரிய விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ஓ-5-6)

# இப்படியும் மரண தண்டனை

(புலோ மாரர்)

பசி, பட்டினி, பஞ்சத்துக்குப் பேர் பெற்ற சோமாலியா நாட்டில்தான் இந்தக் காட்சி. துணியால் கண்கள் கட்டப்பட்டவர், மரண



தண்டனையை எதிர்பார்த்து தலை கவிழ்ந் துள்ளார்.

சோமாலியாவின் மோகடிஷ் பகுதியை அல் -ஷபா என்ற அடிப்படை வாத குழு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. அங்கு தாயை கொலை செய்த இருவருக்கு பொது இடத்தில், மக்கள் கண்முன் மரண தண்டனையை அந்த அமைப்பினர் நிறைவேற் றினர்.

ஒரு குற்றவாளியைச் சுட்டுக்கொன்று விட, இங்கே சிக்கியுள்ளவரை கூட்டத்தினரின் கண்முன் கோடரியால் வெட்டி மரண தண்ட னையை நிறைவேற்றினர். (5)

## ஜப்பானில் லோசன பூகம்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று முன் தினம் காலை லேசான பூகம்பம் தாக்கியது.

எனினும் இதன் காரணமாக சுனாமி எச் சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

மேலும் இந்த பூகம்பம் காரணமாக உயி ரிழப்போ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக உட னடித் தகவல்கள் வெளியாகவில்லை.

ஹோன்ஷா தீவில் ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு (இலங்கை நேரம் மாலை 5.30 மணி ) ஏற்பட்ட இந்த பூகம்பம் ரிக்டர் அளவுகோளில் 5.3 என்ற அளவில் பதிவான தாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள் ளது.

உலகில் ஏற்படும் பூகம்பங்களில் இருபது சத விகிதம் ஜப்பானில்தான் ஏற்படுகிறது என் பது குறிப்பிடத்தக்கது.

(5)

## பிலிப்பைன்சில் படகு விபத்து; 22 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்சில் 100 பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற படகு கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் 22 பேர் பலியாகியுள்ளனர். 34 பேரைக்காணவில்லை. 43 பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

திடீரென்று ஏற்பட்ட பலத்த காற்றால் படகு நிலைகுலைந்து விபத்துக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்சில் கடந்த மாதம் சரக்குக்கப் பல் ஒன்று கவிழ்ந்ததில் 22 பேர் வரை பலி யாகினார்கள்.

பிலிப்பைன்சில் இது மாதிரி படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாவது அடிக்கடி நடந்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஆப்கானிஸ்தானுக்கு வந்தடைந்தார் புஷ்

(காபூல்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆப்கானிஸ்தானுக்கு வந்துள்ளார்.

திடீர்ப்பயணமாக ஈராக்கிற்கு வந்த ஜனாதி பதி புஷ் தற்போது ஆப்கானிஸ் தான் விஜயம் செய்து ஆப்கான் அதிபர் ஹமீதுகர்சாயை சந்தித்துப்பேசுவார் என தகவல்கள் தெரி விக்கின்றன.

முன்னதாக ஆப்கானிஸ்தான் செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் புஷ் கூறியதாவது ஆப்கானிஸ்தான் அதிபர் கர்சாயிக்கு நன்றி செலுத்துவதற்காகவும் மேலும் ஆப்கானிஸ் தான் மக்களுக்கு அமெரிக்கா எந்த சூழ் நிலையிலும் எப்போதும் உதவியாக இருக் கும் என்பதை எடுத்துரைப்பதற்காகவும் செல் வதாகக்கூறினார். (5)

உலக தரிசனம்

# அமெ.ஜனாதிபதி புஷ் மீது பாய்ந்த நிருபரின் சப்பாத்துக்கள்

## ஈராக் விஜயத்தில் பரபரப்பு



(பக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீது சப்பாத்துக்கள் வீசப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பபை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் திடீர்ப் பயண மாக ஈராக்கிற்கு வந்தார். பக்தாத்தில் ஈராக் பிரதமர் நவுரி அல் மாலிக்கியுடன் பத்திரி கையாளர்கள் சந்திப்பில் புஷ் கலந்து கொண் டார்.

பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிக் கொண் டிருந்த போது திடீரென கூட்டத்தில் இருந்த ஒரு நிருபர் தனது சப்பாத்துக்களை கழற்றி ஒன் றின் பின் ஒன்றாக ஜனாதிபதி புஷ் மீது ஏறிந் தார்.

சப்பாத்துக்களை எறியும் போது இது உனது பிரிவுபசார பரிசு என அரபு மொழியில் கூறிக் கொண்டு ஏறிந்தார்.

இச்சம்பவம் அங்கிருந்த அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அவர் அங்குள்ள அல் -பக்தாத் தியா தொலைக்காட்சியைச் சேர்ந்த நிருபர் என தெரியவந்துள்ளது.

ஆனால் ஜனாதிபதி புஷ் இது பற்றி எந்த வொரு பதற்றமும் இல்லாமல் இருந்தார். கவ னத்தை ஈர்க்க பல வழிகள் உள்ளன. அந்த நிரு பர் அடுத்தவர்களது கவனத்தை தன் பக்கம் ஈர்க்க இந்த வழியைப் பின்பற்றியுள்ளார் என ஜனாதிபதி புஷ் கூறினார்.

மேலும் இந்த மாதிரிச் சம்பவங்கள் என்னை அச்சுறுத்தாது என கூறிய அவர் நிருபர் முன் தாதர் எறிந்த சப்பாத்தின் எண் 10 என ஜோக்கடித்தார். (5)

# ஆதாரங்களை இந்தியா கொடுக்காவிட்டால் தீவிரவாதத் தலைவர்களை விடுதலை செய்வோம்

## பாகிஸ்தான் அறிவித்துள்ளது

(இஸ்லாமாபாத்)

'சரியான ஆதாரங்களை இந்தியா கொடுக்காவிட்டால், கைது செய்யப்பட்ட தீவிரவாத இயக்க தலைவர்களை விடுதலை செய்து விடுவோம்' என்று, பாகிஸ்தான் அறி வித்துள்ளது.

மும்பையில் நடந்த தீவிரவாதிகளின் தாக் குதலுக்கு பாகிஸ்தானில் செயல்படும் ஜமாத்- உத்- தவாத் என்ற தீவிரவாத இயக்கமே கார ணம் என்று ஐ.நா. சபையில் இந்தியா புகார் அளித்தது. இதைத்தொடர்ந்து, அந்த இயக் கத்தை, தீவிரவாத இயக்கமாக ஐ.நா. சபை அறிவித்து தடை விதித்தது.

இதனால் பாகிஸ்தானில் உள்ள அந்த இயக் கத்தின் அலுவலகங்களுக்கு பாகிஸ்தான் அரசு சீல் வைத்தது. அந்த இயக்கத்தின் 5 முக்கிய தலைவர்கள் வீட்டு காவலில் வைக்கப்பட்ட னர். அவர்களின் துப்பாக்கி அனுமதிகளும் ரத்து செய்யப்பட்டு உள்ளன. என்றாலும், அந்த இயக்கத்தை பாகிஸ்தான் அரசு இது வரை தடை செய்யவில்லை.

இந்த நிலையில், பஞ்சாப் மாநில உயர் பொலிஸ் அதிகாரி ஷாகுத் ஜாவித் நிருபர்களி டம் கூறியதாவது,

மும்பை தாக்குதலில் பாகிஸ்தான் தீவிர வாதிகள் தான் ஈடுபட்டார்கள் என்பதற்கான சரியான ஆதாரங்களை இந்தியாவிடம் இருந்து கேட்டு இருக்கிறோம். ஆனால் இதுவரை எந்த ஆதாரங்களையும் இந்தியா கொடுக்க வில்லை.

### விடுதலை செய்வோம்

இந்தியா ஆதாரங்களைக் கொடுக்கா விட் டால், நாங்கள் கைது செய்து இருக்கும் தீவிர வாத இயக்கத் தலைவர்களை விடுதலை செய்து விடுவோம்.

தடை செய்யப்பட்ட இயக்கங்கள் நடத்தி வரும் பாடசாலைகள், கல்லூரிகள் செயற் படுவதைத் தடுக்கமாட்டோம்.

அதில் படிக்கும் மாணவர் கள் பாதிக்கப்பட கூடாது என்பதால், அந்த கல்வி நிறுவனங் களின் நிர்வாகத்தை, அரசு அமைக்கும் குழுக்கள் கவனிக்கும் இவ்வாறு பொலிஸ் அதி காரி கூறினார்.

இதேவேளை நேற்று மாலை கிடைத்த செய்தியின் பிரகாரம் ஜமாத்-உத் -தாவாவின் ஆதரவாளர்கள் நான்கு பேரை பாகிஸ்தான் விடுதலை செய்துள்ளது. இது போல அந்த அமைப்பின் பிராந்தியத்தலைவர் மௌ லானா அப்துல் அசிஸ் அல்வியின் வீட்டில் போடப்பட்டிருந்த பொலிஸ் காவலும் விலக் கிக்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைகள் பல்வேறு தரப்பினரிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (5)

## உலக வெப்பத்தால் அதிகரிக்கும் கடல் மட்டம்

# ஓரிசா- பங்களாதேஷ் கடற்கரை மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது!

## சுற்றுச் சூழல் நிபுணர்கள் கருத்து

(டில்லி)

பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதால் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் அதிகரித்துள்ளது.

இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் ஓரிசா முதல் பங்களாதேஷ் வரை உள்ள கடற்பகுதியை ஒட்டியுள்ள நிலங்கள் பெரியளவில் மூழ்கும் அபாயம் ஏற் பட்டுள்ளது என்று சமீபத்தில் சென்னையில் நடந்த கருத்தரங்கில் சுற்றுச்சூழல் , வன வளம், எரிசக்தி ஆகிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

உலகில் காடுகளில் உள்ள மரங்களை வெட்டுவதால் அதன் பரப்பளவு வெகுவாகக் குறைந்து வருகிறது.

இதனால் பருவ மழை பெய்வதில் பாதிப்பு ஏற்பட்டு அதிக மழை பெய்து வெள்ளச்சேதம் ஏற்படுகிறது.


இல்லையெனில் போதிய மழை பெய்யா மல் வரட்சி உண்டாவதால் விவசாயிகள் கடு மையாக பாதிக்கப்படுகின்றனர்.

வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த வாகனங் கள் வெளியேற்றும் கார்பன் -டை- ஒக்சைட் அளவு அதிகரிப்பதால் பூமியின் வெப்பமும் அதிகரித்துள்ளது. நகரங்களில் சேகரிக்கப் படும் குப்பைகள் எரிக்கப்படுவதால் உண்டா கும் புகை மண் டலத்தால் சுற்றுச் சூழல் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது என நிபுணர்கள் கூறியுள்ளார்கள். (5)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் 33 மீற்றர் உயர கிறிஸ்மஸ் மரம் வைக்கபட்டுள்ளது.

# இரத்தக் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும் கொலஸ்ட்ரோல்



### கொலஸ்ட்ரோல் வருவது எப்படி?

நாம் சாப்பிடும் சில உணவு வகைகள் மன அழுத்தம் பழக்க வழக்கங்களால் ஏற்படும் கொழுப்புத்தான் கொலஸ்ட்ரோலாக உருவெடுக்கிறது. இரத்தத்தில் ஓரளவு வரை கொழும்பு சேரலாம்.

ஆனால் அளவுக்கு மிஞ்சினால் ஆபத்துத்தான். அப்போது தான் அது இதயம் வரை பிரச்சினை செய்ய ஆரம்பித்து விடுகிறது.

இரத்தில் சேரும் கொழுப்பு சிறிது சிறிதாக அதிகமாகி இயத ரத்தக்குழாயில் உள்ள சுவருடன் ஒட்டி அதை தடிமனாக்குகிறது. அப்போது இரத்தம் சீராக போக முடியாமல் போகிறது.

அதனால் இரத்தம் கட்டி இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுகிறது. இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டால் இதய பாதிப்பு வருகிறது.மாரடைப்பு ஏற்படுகிறது.

### நல்ல கொலஸ்ட்ரோல்

கொழுப்பு வேறு கொலஸ்ட்ரோல் வேறு. ஆனால் கொழுப்பில் இருந்து பாதகமான விளைவுகள் ஏற்படுத்துவது தான் கொலஸ்ட்ரோல் ஓரளவு கொழுப்பு நம் உடலுக்கு நல்லது மட்டுமல்ல செல்கள் உறுப்புகள் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக உதவுகிறது. அதே கொழுப்பு அதிகரிக்கும் போது கெட்ட கொழுப்பாக மாறுகிறது. அப்போது தான் கொலஸ்ட்ரோல் என்று கணக்கிடப்படுகிறது.

### இருவகைக் கொழுப்பு

லோ டென் சிட்டி லிப்போப் ரோட் டீன்ஸ் என்று அழைக்கப்படும் எல்.டி. எல் கொலஸ்டோல் மிக ஆபத்தானது. அதிக அளவில் இரத்தத்தில் சேர்ந்தால் இரத்தக் குழாய் சுவரில் படிந்து அதை அடைக்கிறது. இரத்த குழாய் அடைப்புக்கு இது தான் முக்கிய காரணம்.

**மருத்துவ விளக்கம்**


ஹை டென்சிட்டி லிப்போப் புரோட்டீன் என்று அழைக்கப்படும் அதிக அடர்த்தியுள்ள கொலஸ்ட்ரோல் . இது உடலில் அதிகமாகச் சேர்ந்தாலும் கல்லீரலுக்குப் போய் அங்கிருந்து கழிவாக வெளியேறிவிடும்.

ட்ரைக்ளிசரைட்ஸ். இது முன்றாவது வகை கொழுப்பு. தசை நார்களுக்கு சக்தியைத் தரும் இது அதிகமாகும் போது கொழுப்பாகி இரத்தத்தில் சேர்கிறது. இதய பாதிப்பு வரும் போது ரத்தத்தில் இதன் அளவும் சரி பார்க்கப் படுகிறது.

### உணவால் தான்...

கொலஸ்ட்ரோல் ஏற்படக் காரணம் பல உண்டு. என்றாலும் நாம் சாப்பிடும் உணவால் தான் ஏற்படுகிறது.

கொழுப்பு உண வால், உடலில் கொழுப்பு அதிகமாகி இரத்தத்தில் கொலஸ்ட்ரோலாக சேர்கிறது. வயிறு வழியாக உணவு சென்றவுடன் கல்லீரலில் கொழுப் புப்பிரிந்து கொலஸ்ட்ரோலாக இரத்தத்தில் சேர்கிறது.



### 200க்கு மேல் உசார்

கொலஸ்ட்ரோல் எல்லோருக்கும் இருக்கும் அது 200க்குள் இருக்கும் வரை பிரச்சினை இருக்காது.

ஆபத்தான அளவு என்பது 200லிருந்து 239 வரை அப்போது கண்டிப்பாக விழித்துக்கொள்ள வேண்டும்.


240 யைத்தாண்டிவிட்டால் அலட்சியமாக விட்டுவிடக்கூடாது. அது விபரீதத்திற்கு வழி வகுத்துவிடும்.

200,240 என்றெல்லாம் சொல்லப்படுவது என்ன தெரியுமா? ஒரு டெசிலிட்டர் ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோல் மில்லி கிராம் தான்.

எல்.டி.எல்., எச்.டி.எல் மற்றும் ட்ரைகிளிசரைட்ஸ் ஆகியவற்றிலும் இந்த அளவு உண்டு.எல். டி.எல்.130க்குள் இருக்க வேண்டும்.எச்.டி.எல்.60க்குமேல் இருக்க வேண்டும். ட்ரைகிளிசரைட்ஸ் 200க்கு கீழ் இருக்க வேண்டும்.

### பக்கவாதம் எப்படி?

இதய இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டால்,மாரடைப்பு வருகிறது.அதுபோல, மூளைக்கு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டால்,பக்கவாதம் ஏற்படுகிறது. உடலில் நரம்புகள் இயங்கினால் தான் கை,கால்கள் இயங்குவது, வாய்பேசுவது,



நடப்பது,மடக்குவது போன்றவை செய்ய முடியும். இரத்தம் சீராக செல்லாமல் போனால், மூளைக்கும் ஒட்சிசன்,சத்துக்கள் பாதிக்கப் பட்டு விடுகிறது. அதனால், அதன் இயக்கம் தடைப்படுகிறது. அதனால், பக்கவாதம் ஏற்படுகிறது.

# பட்டினி கிடக்கலாமா?

ஒல்லியான உடல அழகு வேண்டும் என்பதற்காகப் பட்டினி கிடக் கும் பெண்கள் அதிகம். குறிப்பாக 'மொட லிங்' போன்ற துறைகளில் இருக்கும்பெண் கள்.



சாப்பிடும் விட யத் தில் சரியாக இல்லாதிருப்பது, மிகத் தீவிர மான செயற் பாடு சார்ந்த பிரச்சினை யாகும். ஒழுங் கற்ற சாப்பிடும் பிரச்சினை சார்ந்த மூன்று முக்கியமான வியாதிகள் இருக்கின்றன. அவை, 'அனோரெக்சியா நெர்வோசா', 'புலிமியா நெர்வோசா' மற்றும் 'பிஞ்ச் ஈட்டிங்'.

'அனோரெக்சியா நெர்வோசா' என்பது ஏற்கனவே ஒல்லியாக இருந்தும், தாம் குண்டாக இருக்கிறோம் என்று நினைத்துப் பட்டினி கிடப்பது.'புலிமியா நெர்வோசா' என்பது அதிகமாகச் சாப்பிட்டுவிட்டுப் பின்னர் தாங்களாகவே தூண்டுதலை ஏற்படுத்தி வாந்தி எடுத்து உணவை வெளியேற்றுவது.

'பிஞ்ச் ஈட்டிங்' என்பது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் மனம் போன போக்கில் சாப்பிடுவது. இவ்வியாதிகளால் ஆண்களை விடப் பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் டீனேஜ் பருவத்தில் இந்த வியாதிகளுக்கு ஆட்படுகிறார்கள். தொடர்ந்து மன அழுத்தம், படபடப்புக்கு உள்ளாகிறார்கள். இறுதியில் போதைப்பொருட் களைப் பயன்படுத்தும் நிலைக்குக்கூடத் தள்ளப்படுகிறார்கள்,

உணவு சாப்பிடுதல் குறைபாடு நோய்களை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. இவை இதய, சிறுநீரகப் பிரச்சினைகளையும், முற்றிய நிலையில் உயிர் அபாயத்தையும் ஏற்படுத்தலாம்.

ஆரம்பத்திலேயே இந்த நோய் பாதிப்புகளை அறிந்து உரிய சிகிச்சை பெறுவது ஆபத்தைத் தவிர்க்கும். கண்காணிப்பு, மனநலப் பயிற்சி, சத்தான உணவுக்கான ஆலோசனை, அவசியம் ஏற்பட்டால் மருந்துகள் ஆகியவை இதற்கான சிகிச்சையில் அடங்கும்.

# குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து

குழந்தைப் பருவத்தில் வளர்ச்சி என்பது வேகமாக இருக்கும். அதேநேரம் குழந்தைகளின் உடல் வளர்ச்சியும், மனவளர்ச்சியும் நன்றாக இருக்க நல்ல சத்தான சரிவிகித உணவு மிகவும் அவசியம்.

அது குழந்தை களுக்கு அதிக பருமன், எடை சார்ந்த நோய்களையும் தடுக்கும். இந்த விடயத்தில் நீங்கள் கீழ்கண்ட முறைப்படி உணவு அளிக்கலாம்.



❖ நாள்தோறும் நான்கு அல்லது ஐந்து முறையாக குழந்தைகளுக்கு காய்கறி உணவுகளையும், பழங்களையும் கொடுங்கள்.

❖ புரதம் செறிந்த இறைச்சி, பருப்பு வகைகள், முட்டை போன்றவற்றைச் சரியான அளவில் கொடுக்கலாம்.

❖ குழந்தைகளுக்கு நார்ச்சத்து மிகவும் முக்கியம். அவை அதிகம் உள்ள முழுத் தானிய உணவுகளைக் குழந்தைகளுக்குக் கொடுங் கள்.

❖ எண்ணையில் பொரித்த உணவுகளை விட சுட்ட, வறுத்த, ஆவியில் வேகவைத்த உணவுகள் நல்லது.


❖ கடைகளில் வாங்கும் உணவுகள், 'பாஸ்ட் புட்'களை கூடியமட்டும் தவிர்த்து விடுங்கள்.

❖ இனிப்புச் சேர்ந்த பழச்சாறுகள், சோடாக்களை கொடுக்காதீர்கள். அதற்குப் பதிலாக பாலையும் தண்ணீரையும் கொடுங்கள்.

❖ வளர வளர குழந்தைகளுக்குத் தேவையான சத்துக்களும் (இரும்புச் சத்து ,கல்சியம் போன்றவை), அளவுகளும் மாறும். அதற்கேற்ப கவனித்து உணவளியுங்கள்.

# ஞாபக சக்தியில் ஞாபகம் வையுங்க...

ஞாபாகமறதி என்பது எல்லோருக்கும் பொதுவாக ஏற்படும் அவஸ்தை. நினைவுத் திறனின் மூலமான நமது மூளையும் ஒரு கம்ப்யூட்டர் போலத்தான்.



மூளை அதற்குக் கிடைக்கும் தகவல்கள், விடயங்களை அவற்றின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப 'பைல்களாக' சேமித்து வைக்கிறது. நீங்கள் ஒன்றை நினைவுகூர்கிறீர்கள் என்றால், ஒரு 'நினைவு பைலை' வெளியே உருவி எடுக்கிறீர்கள் என்று அர்த்தம். நமது நினைவுச் சக்தி எப்போதும் ஒரே மாதிரி செயற்படுவதில்லை. இளமையில் இருக்கும் நினைவுத்திறன் முதுமையில் இருபதில்லை. நமக்கு வயதாக வயதாக 'நினைவு பைல்களை' எடுப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

சில நேரங்களில் சில விடயங்களை மறந்துவிடுவது இயல்பானதுதான். அதிகத் தொடர்பில்லாத பழைய நண்பரின் பெயர் என்ன? இருசக்கர வாகனத்தின் சாவியை எங்கே வைத்தோம்? வீட்டிலிருந்து புறப்படும் போது கதவைப் பூட்டினோமா? என்பது போன்ற ஞாபக மறதிகளும், சந்தேகங்களும் ஏற்படுவது சாதாரணம்.

ஆனால் திடீரென்று தொலைபேசியை எப்படிப் பயன்படுத்துவது என்று குழம்புவது, வழக்கமாக அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியை மறந்துவிடுவது சீரியஸான விடயங்கள். அவை, 'அல்சைமர்' வியாதியின் அறிகுறியாகவோ, மனப்பாதிப்பு, அழுத்தம், தலைக்காயம், தைரொய்ட் பிரச்சினை மற்றும் சில மருந்துகளின் விரும் பத்தகாத விளைவுகளாகவோ இருக்கும்.

வரவர ஞாபக மறதி அதிகரித்துக் கொண்டிருக்கிறது என் பவர்கள் உட னடியாக மருத்துவரைப் பார்ப்பது நல்லது.

பொய்யனுக்குக் கிடைக்கும் தண்டனை –அவன் உண்மையைச் சொல்லும்போதும் அதை யாரும் நம்பாதிருத்தல்.

– இஸ்ரேல்

வலம்புரி

## இலங்கை அரசு நினைப்பது போல சர்வதேச சமூகம் பேசாதிருக்காது

இலங்கை இறைமையுள்ள நாடு. இதில் உலக நாடுகள் எதுவும் தலையிடாதென்னும் நினைப்பிலேயே இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

ஆனால், இலங்கை நினைப்பது போல, சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் பேசாதிருக்கும் என்பது தவறு. அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்ற பின்னர் இலங்கை இனவிவகாரம் பாரதூரமானதாக கருதப்படும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுமாறு ஐ.நா. சபைக்கு அழுத்தம் கொடுக்கப்படும். அந்த அழுத்தத்தை ஐ.நா. சபை ஏற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உருவாகும்.

எனினும் இதனை உணராத இலங்கை அரசு தொடர்ந்தும் யுத்தம் என்ற மாயையில் மூழ்கிப் போயுள்ளது.

இந்திய மத்திய அரசு வழங்கும் ஆயுத உதவிகள், ராடர் வசதிகளை மையமாகக் கொண்டு இலங்கை அரசு யுத்தத்தை முன் நகர்த்தலாம்.

இலங்கைக்கு ஆயுத உதவி வ்ழங்கிய இந்தியாவும், சர்வதேச சமூகத்தின் கண்டனத்திற்கும் எச்சரிக்கைக்கும் ஆளாக வேண்டி வரலாம்.

தற்போதைய கள நிலைகளை நோக்கும்போது சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிரான போக்கையே கொண்டுள்ளது.

சிறிய நாடு என்பதைத் தவிர வேறு எந்த மன்னிப்பும் இலங்கைக்கு கிடையாதென்பதே உலக நாடுகளின் தற்போதைய முடிபாகும்.

உலகின் இந்த இறுக்கமான முடிபிலிருந்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இருக்கக் கூடிய ஒரே வழி யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாகும்.

இச்சந்தர்ப்பத்தைத் தவற விடும் ஒவ்வொரு கணமும் சர்வதேசத்தின் பார்வை இலங்கையை நெருங்கிக் கொண்டே இருக்கும்.

இலங்கை இன விவகாரத்தில் தலையிட வேண்டும் என்ற உணர்வை உலக நாடுகள் உணர்ந்திருக்கும்போது இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கி வந்த இந்தியாவும் நிலைமைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகும்.

அத்தகையதோர் சூழமைவை வெளிப்படுத்துவதாக அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு செய்யவுள்ள விஜயம் அமையும் எனக் கொள்ளலாம்.

உலகம் முழுவதனையும் பகைத்துக் கொண்டு சிறியதும் வறியதுமான இலங்கை இயங்குவதென்பது முடியாத காரியம்.

ஆகவே சர்வதேசத்தின் பகைமைப் பாட்டிலிருந்து விடுபட்டு நல்ல நாடு என்ற பெயரைப் பெறுவதற்கு இலங்கை அரசு சமாதான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

# தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதனை எவராலும் மறுத்துவிட முடியாது–அமைச்சர் டளஸ்

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும் இதனை எவராலும் மறுத்துவிட முடியாது எனவும் போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அமைச்சர் அழகப்பெரும இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுக்காலம் முதலே தமிழ் பேசும் மக்களுக்கு பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தமிழர் பிரச்சினைகளுக்கு உரிய வகையிலான அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படவேண்டியது அனைவரினதும் முக்கிய கடமை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதன் மூலம் நாட்டின் தேசியப்பிரச்சினைக்கு சுலபமாக தீர்வு காண முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஓ-5)

# அமைச்சர்களின் செயலாளர்களில் மாற்றம்; கருணாவுக்கு அமைச்சுப் பொறுப்பு?

(கொழும்பு)

அமைச்சர்களுக்கான செயலாளர்களில் விரைவில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் வெற்றிடங்கள் தோன்றியிருப்பதால் அவற்றுக்குப்புதியவர்களை நியமிப்பதுடன், ஏனைய அமைச்சர்களின் செயலாளர்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தவிருப்பதாக உயர்மட்ட அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனம் , விவசாய அபிவிருத்தி மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சும் ஆகியவற்றுக்குப் பதில் செயலாளர்களே தற்பொழுது பணியாற்றி வருவதாகவும் இந்த அமைச்சுக்களுக்கு மிக விரைவில் நிரந்தர செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வேறு சில அமைச்சுக்களின் செயலாள்கள் இந்த மாதத்துடன் ஓய்வு பெறவிருப்பதால் அரசாங்கம் அமைச்சுக்களின் செயலாளர்களில் மாற்றங்களை ஏற்படுத்த விருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சரவையில் கிழக்கு மாகாணத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் ஒருவரை இணைத்துக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள் விவகாரம் மற்றும் பொதுநிர்வாக அமைச்சராகவிருந்த கருஜெயசூரிய ஐ.தே.கவுடன் இணைந்துகொண்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு வேறு ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் , கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் ஒருவரை அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் கருணாநிதி என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் என அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

(ஓ-5)

# கொழும்பு நகரில் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தும் நடவடிக்கை ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக 2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் பாதுகாப்புக்கமராக்களை பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என இந்த நடவடிக்கைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரட்ண கூறினார்.

கண்காணிப்புச் செயற்பாடுகளுக்காகப் பொருத்தப்படவிருக்கும் கமராக்கள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் ஏற்கனவே ஜப்பானில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு நகரின் அனைத்துவீதிகள் மற்றும் முக்கிய இடங்களை கண்காணிக்கும் நோக்கில் 28 கமராக்கள் பொருத்தப்படவிருப்பதாக விக்ரமரட்ண மேலும் தெரிவித்தார்.

இந்தக்கமராக்களை கண்காணிப்பதற்கு விசேட கணனிமயப்படுத்தப்பட்ட நிலையம் ஒன்று அமைக்கப்படவிருப்பதுடன் அங்கு கமராக்கள் மூலம் பிடிக்கப்படும் காட்சிகள் பதிவு செய்யப்பட்டு சேகரிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு நகரில் பாதுகாப்புக் கமராக்களைப் பொருத்தும் திட்டம் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னான்டோவின் பதவிக்காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஓ-5)

# பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையிலேயே பெற்றோலின் விலை உயர்வு

(கொழும்பு)

தெற்காசிய வலயப் பிராந்தியத்தில் இலங்கை நுகர்வோரே அதிக விலை கொடுத்து பெற்றோலைக் கொள்வனவு செய்வதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலேயே விலை உயர்வாக உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

90ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடந்த 2 மாதங் களில் 35 ரூபாவினால் குறைத்துள்ள போதிலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் இடத்து விலை உயர் வாகக் காணப்படுவதாகக் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த வாரத்தில் பெற்றோலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டது. இதன் படி இலங்கையில் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 122ரூபாவாகும்.

எனினும் அண்டை நாடானா பாகிஸ்தானில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை வெறும் 80 ரூபா எனவும் இந்தியாவில் 100 ரூபாவிற்கும் பூட்டானில் 95 ரூபாவிற்கும் பங்களா தேஷில் 120 ரூபாவிற்கும் பெற்றோல் விற்பனை செய்யப்படுகிறது. பிராந்தியத்தின் பெரிய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் எரிபொருளின் விலை கணிசமான அளவு உயர்வாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

முறையான ஒரு விலைப்பொறிமுறை , உரிய வகையிலான நிர்வாகம் காணப்படாமையே இந்த நிலைமைக்கு காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

(ஓ-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## அன்பே பலனைத் தரும்




கடமை அவ்வளவு இனிமையான ஒன்றல்ல; அன்பு என்னும் எண்ணெய் இடாமல் அதன் சக்கரங்கள் எளிதாகச் சுழலாது; மாறாக , தொடர்ந்து உராய்ந்த வண்ணமே இருக்கும். அன்பு இல்லாவிடில் பெற்றோர் குழந்தைகளுக்கும்,குழந்தைகள் பெற்றோருக்கும் , கணவன் மனைவிக்கும்,மனைவி கணவனுக்கும் தங்கள் கடமையை எவ்வாறு செய்ய இயலும்? நமது வாழ்வில் தினமும் சிறு சிறு பூசல்களாகிய உராய்வுகளைச் சந்திக்கவில்லையா? அன்பின் வழியாக மட்டுமே கடமை இனிமையானதாக இருக்க முடியும். இனி, சுதந்திர நிலையில் மட்டுமே அன்பு பிரகாசிக்க முடியும். புலன்களுக்கும் மனித வாழ்வில் தினமும் சந்தித்தே தீர வேண்டியதான கோபங்களுக்கும் பொறாமைகளுக்கும் இன்னும் எத்தனையோ அற்பத்தனங்களுக்கும் அடிமையாவதுதான் சுதந்திரமா? நாம் வாழ்வில் சந்திக்கின்ற இத்தகைய சிறு நெருடல்களுக்கு நடுவில் பொறுமையுடன் அவற்றைச் சகித்துக்கொள்வதே சுதந்திரத்தின் மிகவுயர்ந்த வெளிப்பாடாக இருக்க முடியும்.

எரிச்சல் மற்றும் பொறாமைக்கு எளிதில் வசப்படுகின்ற இயல்புடையவர்களாகிய பெண்கள் எளிதில் கணவனைக் குறைகூறி விடுகிறார்கள். அது தான் தங்கள் சுதந்திரம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் தாங்கள் அடிமைகளாக இருப்பதையே அதன் மூலம் நிரூபிப்பதை அவர்கள் அறியவில்லை. மனைவியிடம் குற்றம் காண்கின்ற கணவர்களின் விடயமும் இது தான்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா' 10

வலம்புரியின் வாசகர்கள் வழங்கிய படங்கள்





குருநகர் கடற்கரை



படங்கள் எஸ்.டி.எஸ்.சுரேஷ்

### யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் புகுந்த வெள்ளம்...

நிலத்தில் தேங்கி நின்று மனி தருக்குத் தொற்று நோய் பரப்பும் தீங்கைச் செய்யும் வெள்ளமும் மருந் தெடுக்க நினைத்ததுபோல், யாழ்ப் பாணப் போதனாவைத்தியசாலைக் குள் புகுந்து கொண்டது.

பொதுமக்களுடன் சீறிப்பாயும் பாதுகாப்பு ஊழியர்கள் எவராலும் வெள்ளத்தை துரத்த முடியவில்லை.

வெளிநோயாளர் பிரிவில் நுழைந்த வெள்ளம், எந்த வாட்டில் தன்னை அனுமதிப்பார்கள் என்று தெரியா மல் எல்லாக் கீழ்வாட்டிற்கும் சென்று பார்த்தது.

கீழ் வாட்டில் இருந்தவர்கள் வெள்ளத்தின் ,வருகையால் பெரும் அவஸ்தைப்பட்டனர். உட னடியாக அவர்கள் மேல் வாட் டிற்கு அனுப்பப்பட்டனர்.

யாழ். போதனா வைத்திய சாலை யின் சத்திரசிகிச்சைப்பிரிவு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவு என எங் கும் வெள்ளம் ஆட்சி நடத்தியது.

சமையல் பகுதி இயங்க முடி யாமையினால் உணவு விநியோ

வெள்ளத்தின் பெருக்கத்தினால் மலசலகூடங்கள் யாவும் பயனற்ற வையாகின.

ஒட்டுமொத்தத்தில் யாழ். போத னாவைத்தியசாலைக்குள் புகுந்த வெள்ளத்தினால் நோயாளர்கள் மற் றும் பணியாளர்களும் பட்ட கஷ் டங்கள் ஏராளம்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடந்த போது குருநகரில் உள்ள ஐந்து மாடியில் குடியிருந்த படையினர் ஷெல் தாக்குதலை நடத்துவர். கூடவே யுத்த விமானங் களும் தங்கள் கடமைக்குக் குண்டு களை வீசிக்கொள்ளும்.

அப்போதெல்லாம் யாழ். போத னாவைத்தியசாலையின் மேல் வாட் டுகளில் இருந்த நோயாளர்கள் கீழ் வாட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

குண்டுவீச்சில் உனக்கு இருக் கக்கூடிய பாதுகாப்பை பார்த் தாயா? என்று கீழ் வாட்டுகள் மேல் வாட்டுகளை ஏளனம் செய்யும்.

இப்போது நிலைமை மாறி நடக் கிறது.வெள்ளம் கீழ் வாட்டுகளை ஆக்கிரமிக்க மேல் வாட்டுகள் பார்த்தாயா? அன்று எனக்கு. இன்று உனக்கு இது தான் இந்தப்பிரபஞ்



அன்பு வாசகர்களே!

வெள்ளப் பெருக்குத் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் தகவல்கள் தங்க ளிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றன. தங் களால் தரப்படும் புகைப்படங்கள், தகவல் கள் இப்பகுதியில் சேர்க்கப் படும். நேரிலோ தபால் மூலமோ விரைவில் ஒப்படைத்து உதவவும். (ஆ-ர்)

## யாழ். போதனாவைத்தியசாலை வெள்ளத்தின் கட்டுப்பாட்டில்



வைத்தியசாலை முன்பாக

கமும் தடைப்பட்டது.

மருத்துவர்கள் மற்றும் வைத்தி யசாலைப் பணியாளர்கள் பல் வேறு சிரமங்களின் மத்தியிலும் தமது பணியைச் சிறப்பாக ஆற் றினர்.

**என்.விஜயன்**

அவர்கள் பசிநோக்காது நோயா ளர்களைப் பாதுகாப்பாக மேல் வாட்டுகளில் அனுமதிப்பதில் ஈடு பட்டனர் என்ற செய்தி நெஞ்சை நெக்குருகச் செய்யும்.

சத்தின் படைப்பு என போதனை செய்திருக்கும்.

இந்த போதனைகள் யாழ். போதனாவைத்தியசாலைகளின் வாட்டுகளுக்கு மட்டும் உரியதல்ல மனித வாழ்வுக்கும் அதுவே அனு பவப்பாடம்.

வாழ்ந்தவர் தாழ்வதும், தாழ்ந்த வர் உயர்வதும் இறைவனின் செயல். இந்த உண்மையை உணரும் போதே மனித வாழ்வு அர்த்த முடையதாக மாறுகிறது.

இதனை "நிஷா" மழை-புயல் உணர்த்துவதாக நாம் பொருள் கொள் ளலாம்.

(வளரும்)

# டெண்டுல்கரின் சதம் கைகொடுக்க இந்திய அணி அபார வெற்றி



(சென்னை)

டெண்டுல்கர், யுவராஜ், சேவாக் மற்றும் காம்பீரின் கூட்டான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி முதலாவது டெஸ்டில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 11ஆம் திகதி சென்னையில் ஆரம் பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 316 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஸ்ரொரஸ் 123 ஓட்டங்களையும் பிறிர் ஆட்டமிழக்காமல் 53, குக் 52 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங், மிஷ்ரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் அணித் தலைவர் தோனி 53, ஹர்பஜன் சிங் 40 மற்றும் டெண்டுல்கர் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிளின் டொப், பனீசர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸில் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுக் களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதன் மூலம் இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 387 ஓட்டங்களை நிர்ணயித்தது இங்கிலாந்து அணி

இதில் ஸ்ரொரஸ், கொலிங்வூட் ஆகியோர் தலா 108 ஓட்டங்களையும் பிறிர் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சகீர்கான்,



இஷாந் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 387 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் நான்காம்நாள் ஆட்ட நேரமுடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் மிழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**காம்பீர் அசத்தல்;**
**டிராவிட் சொதப்பல்**

இந்நிலையில் 5ஆவதும் இறுதிநாளுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 10 ஓட்டங்களை எடுத்த போது டிராவிட் 4 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டெண்டுல்கர் 3ஆவது விக்கெட்டுக்காக காம்பீருடன் ஜோடி சேர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

இதில் ஆரம்பம் முதலே பொறுப்புடன் துடுபெடுத்தாடிய காம்பீர் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் இணைப்பாட்டம் இந்திய அணிக்கு நம்பிக்கையளித்தது. எனினும் காம்பீர் 66 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய லக்ஸ்மன், நிதானமாக துடுப்பெடுத்தாடி டெண்டுல்கருக்கு சிறப்பான இணைப்பை வழங்கினார்.

எனினும் லக்ஸ்மன் 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 224 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

**இணைந்தனர்**
**டெண்டுல்கர்–யுவராஜ்**

இந்நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர்–யுவராஜ் சிங் ஜோடி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி இந்திய அணியின் வெற்றிக்கு அடிதளமிட்டனர்.


இதில் டெண்டுல்கர் அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி 250 ஓட்டங்களைக் கடந்தது. மறுமுனையில் யுவராஜ் சிங் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தார்.

நேற்றைய 5ஆம் நாள் தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது இந்திய அணி 4 விக்கெட்டுக்களையிழந்து 304 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு டெண்டுல்கர்–யுவராஜ் சிங் ஜோடி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இதில் யுவராஜ் சிங் தனது 76 ஆவது பந்தில் அரைசதத்தைக் கடந்தார். இந்த ஜோடியைப் பிரிக்க இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன் பந்துவீச்சாளர்களை மாற்றியும் களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் முடியாத காரியமாகிற்று.

இதில் டெண்டுல்கர் பவுண்டரிகள் விளாசி தனது 41ஆவது சதத்தைப் பூர்த்திசெய்ய இந்திய அணியும் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 387 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று வரலாறு



படைத்தது.

இதில் ஆட்டமிழக்காமல் டெண்டுல்கர் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 103 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் (8 பவுண்டரிகள், ஒரு சிக்சர் அடங்கலாக) 85 ஓட்டங்களையும் எடுத்ததுடன் முன்னதாக வீரேந்திர செவாக் 83 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், பிளின்டொப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னணியிலுள்ளது.

இப்போட்டியில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த வீரேந்திர சேவாக் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

## மீண்டும் மோசமான ஆட்டம் டிராவிட் நீக்கப்படுவாரா?

(சென்னை)

இந்திய அணியின் மூத்த துடுப்பாட்ட வீரரான ராகுல் டிராவிட் தொடர்ந்து நெருக்கடியில் உள்ளார்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவரது ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. 4 டெஸ்டில் (7 இன்னிங்ஸ்) 120 ஓட்டங்களே எடுத்தார்.

இதேபோல் இங்கிலாந்துக்கு எதிரான சென்னை டெஸ்டிலும் அவர் சொதப்பினார்.

முதல் இன்னிங்சில் 3 ஓட்டங்களை எடுத்த டிராவிட் மிகவும் முக்கியமான 2–வது இன்னிங்ஸில் நேற்று 4 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார். இதனால் அவர் மிகுந்த விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறார். டிராவிட் கடைசியாக விளையாடிய 9 இன்னிங்சிலும் சேர்த்து 127 ஓட்டங்களே எடுத்து உள்ளார். சராசரி 14.11 ஆகும்.

டிராவிட் ஏற்கனவே ஒரு நாள் போட்டிக்கான அணியில் இருந்து கடந்த ஆண்டு நீக்கப்பட்டார். இந்த மோசமான ஆட்டம் காரணமாக தற்போது டெஸ்ட் அணியில் இருந்தும் நீக்கப்படுவதற்கான நிலையில் டிராவிட் உள்ளார்.

## முதலாவது டெஸ்ட் சமனிலையானது

நியூசிலாந்து –மேற்கிந்திய தீவுகளுக்கு இடையில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று மழை காரணமாக ரத்து செய்யப்பட்டதனை யடுத்து ஆட்டம் சமனிலையானது.

இந்த போட்டி ஆரம்பமான நாள்முதலே அவ்வப்போது மழை பெய்ததால் பாதிப்பு ஏற்பட்டது. நேற்று முன்தினம் ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்ஸில் 2



விக்கெட் இழப்புக்கு 44 ஓட்டங்கள் எடுத்திருந் தது.

முன்னதாக நியூசிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 365 ஓட்டங்களை எடுத்ததுடன். மேற்கிந்தியத்தீவுகள் தனது முதல் இன்னிங்சில் 340 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் 8வது வீரராக களமிறங்கிய ஜெரோம் ரெய்லர் அதிரடியாக விளையாடி 106 ஓட்டங்கள் குவித்ததே நேற்று முன்தின ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

ஏற்கனவே 2வது நாள் ஆட்டம் கைவிடப் பட்டது. 3வது நாள் ஆட்டமும் பாதி பாதிக்கப் பட்டது. இந்த நிலையில் நேற்று கடைசி நாள் ஆட்டமும் மழை காரணமாக நடைபெறவில்லை. இதையடுத்து முதல் டெஸ்ட் சமனிலையில் முடிந்தது.

இருஅணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நபியரில் நடைபெறுகிறது.

(5)

### யாழில் நால்வர்...

வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் வீட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ரஞ்சித்குமார் வரணி மகா வித்தியாலயத்தின் மாணவன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீசாலை மேற்கைச் சேர்ந்த இராசன் ரவீந்திரன் (வயது 36) என்பவர் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார் என அவரது குடும்பத்தினரால் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த பிரஸ்தாப நபரை வெளியே அழைத்து கடத்திச் சென்றதாகக் கூறப்பட்டது.

இதைவிட உச்சிலம் வீதி கரவெட்டியைச் சேர்ந்த தேவராஜா சுபேந்திரகுமார் (வயது 30) என்பவர் கடந்த 8ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக அவரது மனைவியினால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அவர் வீட்டிலிருந்து வியாபார நோக்கமாக யாழ்ப்பாணத்துக்கு வந்தபோதே கடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

### எரிபொருள்...

றத்தில் நடைபெற்றது. இது குறித்த விவாதங்களை அடுத்து திறைசேரி செயலாளரிடம் எரிபொருளுக்கான வரி 100 வீதத்திற்கு மேற்படாதவாறு நிர்ணயித்து எதிர்வரும் 17 ஆந் திகதி சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கு முன்னர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதற்கமைய எரிபொருள்களின் விலையை திருத்தியமைக்கும் வகையிலான புதிய விலைச் சூத்திரமொன்றைத் தயாரித்த நீதி அமைச்சின் செயலாளர் சுமிந்த அபயசிங்க அதனை உயர் நீதிமன்றத்தில் நேற்று சமர்பித்தார் இந்த விலையைச் சூத்திரம் யதார்த்தமானது அல்ல எனவும் தெளிவற்றதெனவும் தீர்மானித்த உயர் நீதிமன்றம் அது மிகைப்படுத்தப்பட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் ஒன்று எனவும் அறிவித்தது.

இதற்கமைய நிதி அமைச்சின் செயலாளரின் புதிய விலைச் சூத்திரத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்து. எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் நூற்றுக்கு, நூற்றெண்பத்தொன்பது வீத வரியை விதித்து எரிபொருள் விலையை நிர்ணயிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சியை அனுமதிக்க முடியாது எனவும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ச-3,5)

### முல்லைத்தீவு...

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களால் முல்லைத்தீவுப் பகுதிகள் அதிர்கின்றன. இரண்டு ஷெல்கள் எமது வைத்தியசாலை வளாகத்தின் விடுதியின் கூரையிலும் தண்ணீர்த்தாங்கியின் மேற்பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன.

இதனால் காயங்கள் ஏற்படவில்லை. ஆனாலும் விடுதியில் கர்ப்பிணித் தாய்மார்கள் இருந்தார்கள். அதைவிட குறைந்தளவு நோயாளர்களே இருந்தார்கள். ஆகவே நாங்கள் தற்பொழுது எமது வைத்தியசாலையை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்கின்றோம். அதைவிட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையானது பழைய மாவட்ட வைத்தியசாலை இருந்த இடத்தில் தற்காலிகமாக செயற்படுத்த தீர்மானித்துள்ளோம் என்றார். (ச-3)

### பால்மாக்களின்...

கொண்ட பால்மாப் பைக்கற் ஒன்றின் விலை 15 ரூபாயாலும் ஒரு கிலோ எடைகொண்ட பால்மா பைக்கற் ஒன்றின் விலை 50 ரூபாயாலும் குறைவடைவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான உடன்படிக்கைகள் நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டன.

நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவரும் பால்மா விற்பனை நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டனர்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய தலைமையகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பால்மா உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளின் தகவல்களுக்கு ஏற்ப பால்மா வகைகளின் புதிய விலைகள் பற்றி அமைச்சர் அறிவித்தார்.

அதன்படி தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் பால்மா 400 கிராமின் விலை 15 ரூபாயால் குறைக்கப்படுவதுடன் ஒரு கிலோவின் விலை 50 ரூபாயால் குறைக்கப்படுகிறது.

இதேவேளை சில நிறுவனங்கள் குறிப்பிட்ட தொகையை விடவும் விலையைக் குறைத்துள்ளன. அதன்படி லக்ஸ்பிறே 400 கிராமின் விலை 245 ரூபாயாகவும் ஒரு கிலோவின் விலை 600 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

மில்க்ரோ 400 கிராமின் விலை 240 ரூபாயாகவும் ஒரு கிலோவின் விலை 580 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன. கெண்டி பால்மா 400 கிராம் 229 ரூபாயாகவும் ஒரு கிலோ 549 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன.ரத்தி 400 கிராம் 250 ரூபாயாகவும் ஒரு கிலோ 615 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

400 கிராம் பால்மா பைக்கற் ஒன்றை புதிய விலைக்கு விற்பனை செய்யாதவர்கள் மீது இன்று முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

புதிய சில்லறை விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தால் அது குறித்து 011 232 1696 அல்லது 011 2399146 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இப்புதிய விலையேற்றத்தை எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நிலையாக வைத்திருக்க பால்மா உற்பத்தி நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. (எ-5)

### அம்பகாமம்...

பின்னர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின்றது. எனினும் இந்த சம்பவம் குறித்து விடுதலைப்புலிகளின்தரப்பிலிருந்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ச-3,5)

### இந்தியாவைப் பகைக்காது...

னைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிக்கொத்தாவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது ;

இந்திய அரசாங்கம் ஒருபோதும் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதால் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வருகைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை.

இந்தியாவை ஒருபோதும் பகைக்கக் கூடாது. ஏனெனில் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் தடையுள்ளது. இந்நிலையில் இந்தியாவின் உதவியைப் பெற்றுத்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வருவது விடுதலைப்புலிகளுக்கு உதவி புரிவதற்காக அல்ல. எமது நாட்டுக்கு உதவியளிப்பதற்காகவே.

அவருடைய வருகைக்கு அரசாங்கமும் அதற்கு ஆதரவு வழங்கும் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிப்பது பிழையான நடவடிக்கை.

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா இதுவரை நீக்கவில்லை. ஆகவே, இந்தியாவை எமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும்.

கிளிநொச்சியை கைப்பற்றுவோம் என்று அரசாங்கம் மார் தட்டியது. ஆனால் நடந்தது என்ன?

தற்போது முல்லைத்தீவை கைப்பற்றப் போகின்றோம் என கூறுகிறார்கள், அப்படியானால் கிளிநொச்சியை கைப்பற்ற மாட்டீர்களா? அதனை கைப்பற்றும் முயற்சிக்கு என்ன நடந்தது? போர் எதற்காக நடத்தப்படுகின்றது என்பது குறித்து படைத்தரப்புக்கும் மக்களுக்கும் அரசாங்கம் விளக்கமளிக்கவேண்டும் என்றார் அவர்.

மேலும்இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய பேசியதாவது,

பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அரசாங்கம் ஈடுபடுகின்றது. ஆனால்அதேபோன்று பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படவேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியிடம் சிறந்த பொருளாதாரக் கொள்கை உண்டு. அந்த கொள்கை மூலமே நாட்டின் பொருளாதாரத்தை மீட்க முடியும். பொருத்தமான பொருளாதார கொள்கை மகிந்த அரசாங்கத்திடம் இல்லை என்றார்.(ச-5)

### புலிகளின் தந்திரங்க...

அவர் அங்கு மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினாலோ, விமானத் தாக்குதல்களை நடத்தினாலோ அல்லது தற்கொலைத் தாக்குதல்தான் நடத்தினாலோ படையினர் போர்க்களத்திலிருந்து பின்வாங்கமாட்டார்கள். முன்னேறிக் கொண்டே செல்வார்கள்.

விடுதலைப் புலிகள் தமக்குத் தெரிந்த எந்த விதமான தாக்குதல்களை நடாத்தினாலும் படையினர் பின்வாங்க மாட்டார்கள். மழை, வெள்ளம்,புயல் போன்றவற்றால் அவர்களது நடவடிக்கையில் தடங்கல் ஏற்பட்டாலும் அவர்கள் தமது இலக்கை நோக்கி முன்னேறிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் உயிர்த் தியாகம் செய்த சிங்கப்படையணியின் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் இராணுவத் தளபதியாக திகழும் சரத் பொன்சேகாவும் இந்தப் படையணியைச் சேர்ந்தவர் எனவும் உலகின் எந்தவொரு படையணியைவிடவும் எமது படையினர் திறமை மிக்கவர்கள் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு நவீன ஆயுத வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமா? அவர்களுக்குப் பின்னால் தெற்கு மக்கள் இருக்கிறார்கள்.படையினருக்கு அவர்கள் ஊக்கம் அளித்து வருகிறார்கள்.

படையினரின் நடவடிக்கையினால், அவர்களின் வீரத்தினால் பெறப்படும் வெற்றி எந்தக் கட்டத்திலும் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது. போர் நடைபெறும் பிரதேச மக்களை விடுவிக்கும் மனிதாபிமான நோக்கம் கொண்டதாகவே போரும் அதன் வெற்றியும் இருக்கும்.

கிழக்கை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டு கிழக்குமக்களின் மனங்களை வென்றது போல் வடக்கையும் மீட்டு வடக்கு மக்களின் மனங்களை வெல்வோம்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக தமது உயிர்களைப் பணயம் வைத்துப் போரிடும் படையினரை பலவீனப்படுத்தும் வகையில் சில ஊடகங்கள் செயற்படுகின்றன. இதனால் படையினரின் வெற்றிகரமான முன்னேற்றம் ஒரு போதும்பின்னடைவு காணப்போவதில்லை.

உலக நாடுகளில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்குச் சமமானதாக எமது படையினரும் அர்ப்பணிப்புடன் போரிட்டு வருகின்றனர். இதன் மூலம் பெருவாரியான வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)

### கூட்டமைப்பு எம்.பிக்...

இலங்கையின் அரசியல் அமைப்புக்கு முரணான கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்தியாவில் தெரிவித்துள்ளார்.

இவருக்கு எதிராக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். இதற்கு தொடர்ந்தும் பதிலளித்த அமைச்சர்,

சிவாஜிலிங்கம் எம்.பி மட்டுமல்ல; இன்னும் பல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இலங்கையின் அரசியல் யாப்புக்கு எதிராக வெளிநாடுகளில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் இலங்கையின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பேன் என்றே சத்தியப் பிரமாணம் எடுக்கிறார்.

அந்த சத்தியப் பிரமாணத்துக்கு எதிராகச் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது என்று அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா,ஜெயானந்தமூர்த்தி,பா.அரியநேந்திரன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையும், அரியநேந்திரன் எம்.பி. மருத்துவத் தேவைக்காக இந்தியாவுக்குச் சென்றபோது தடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)


## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜனாதேவி வேலாயுதம்



முதலாம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜனாதேவி வேலாயுதம் *15.12.2008* (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி செல்லாச்சி ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சித்தவைத்திய கலாநிதி சின்னத்தம்பி அசுபதி ஆகியோரின் அன்பு மருமகளும்,மதிவதனி (கனடா), மோகன்பாரதி (இலண்டன்),இளங்கோமாறன் (இலண்டன்), மேனகா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பானு (கனடா), செல்வி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2008 அன்று கொழும்பில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பானெஸ் அவெனியூ,**
**கல்கிசை.**
**T.P 060 2172542**

**தகவல்:**
**கோ.சி.வேலாயுதம் (கணவர்)**
**(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)**

(இ)

## கண்ணீர் அஞ்சலி



**வலம்புரியின் முன்னாள் ஆசிரியர்**
**திரு.கோ.சி.வேலாயுதம்**
***(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)***
**அவர்களின் அன்பு மனைவி**
**திருமதி சரோஜனாதேவி வேலாயுதம்**

அவர்கள் கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.